887

H. M. 1803. OCTOBER 1927 Vol. V No. 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 NOV 1927
MADRAS

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ.

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு, ஜரிகையினால், "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முகதலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும், ஸ்திரீகளுக்கு, இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேக மில்லை.

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44	0	0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36	0	0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷை கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52	0	0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60	0	0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade, *Phone : No. 2693.*

சிறந்த வாசனை

ஊதுவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி ,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ.	8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம் ஷை	ரூ.	2	8	0

9-ம் பதிப்பு !   வெளிவந்து விட்டது   9-ம் பதிப்பு !!

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்தி ஐம்பதினாயிரம் ஜனங்களுக்கு சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும் நிகரற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிட மிருந்து உயர்ந்த நற்சாக்ஷி பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான்

வெளிவந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய் விட்டன உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்றுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது, இப்பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு! அணா முதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பல போலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன, ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. **2.**

வி. பி. தபால் செலவு 0 8 0.

தி. இராஜகோபால் முதலியார்

302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் : :: காசி.

ஸ்ரீ முனியோவா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம் வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஹூ ஐப்பசிமீ **1927** அக்டோபர்மீ	இதழ் 3.

THE REGISTRAR
No.
16 NOV 1927
MADRAS

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 115
2.	முரசு	... 116
3.	செம்பு அல்லது தாமிரம் ...	... 117
4.	தமிழ்	... 122
5.	நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத் தலைவன்	132
6.	மேகம்	... 137
7.	சமண பாரதம்	... 139
8.	ஸ்ரீ ஹர்ஷ சரிதம்... ...	... 143
9.	கடோரசித்தன் கதை ...	... 147
10.	இயற்பகை நாயனார் மனைவியார்...	... 151
11.	மதுசாரம்	... 154
12.	பத்திராசிரியர் குறிப்புகள் ...	... 161
13.	உலகப்போக்கு	... 164

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
210372

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி

மின் கொடி யன்ன விடை யாரனே
கார் மிக விகழும்

வன் கொடி தேனுந் தவிர்க் கின்றிலா
யென்று வாழ்விப் பையோ

மின் கொடி று ண்ணத் திருமாலுக்
கீந்து வியன் பொலி சீர்ப்

பொன் கொடிப் பூதலத் தோர்
தம்மை யாளும் பொறி யணங்கே.

முரசு

(முன் தொடர்ச்சி)

12. தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்.

13. யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வ மொன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

14. வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றந்தப் பூனை—அவை
பேருக் கொரு நிறமாகும்.

15. சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலி னிறமொரு குட்டி.

16. எந்த நிற மிருந்தாலும்—அவை
யாவு மொரேதர மன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
தேற்ற மென்றுஞ் சொல்லலாமோ?

17. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கை களெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்.

—பாரதி.

செம்பு அல்லது
தாமிரம்.

(ஸ்ரீமான் எஸ். எஸ். ஆனந்தம் எழுதியது.)

செம்பின் இயற்கைக் குணம்.

ஆசியாவின் வடபாகத்திலும், ஆபிரிக்காவின் கீழ்பாகத்தில் சுப்பீரியர் எரியிலும், வடஅமெரிக்காவில் மெக்ஸிகோவிலும் செப்புச்சுரங்கங்கள் மிகுதியாகக்கிடைக்கின்றன. இது நிலத்தில் இயற்கையாக தனி லோகமாகக் கிடைப்பதுண்டு. சிறு கட்டிகளாகவும் காணப்படுகின்றன. சில இடங்களில் கந்தகம் பாஷாணம் முதலியவைகளோடு கலந்து பெருங்கட்டிகளாகவும் கிடைக்கும். இதன் நிறம் சிவப்பாயினும் அநேகமாய் பச்சை நிறமான கற்களாகத்தான் கிடைக்கின்றது. செம்பு கட்டியானது கனமுள்ளது. அதனைத் தேய்த்தால் ஒரு வகை கெட்ட மணமுண்டாகும். வெகுட்டல் சுவையுடையது. இது மிக மெல்லிய கம்பியாக நீட்டி இழுக்கவும், தகடாகத்தட்டவும் கூடிய நயமுள்ள லோகம்.

செம்பு 1990 பாகை (டிக்கிரி) வெப்பத்திற்கு உருகும். இதனினும் மிகுந்த சூட்டிற்குச் சிறிது ஆவியாகப் பறக்கும். இதன் ஆவி பச்சை நிறச்சுடர் விட்டு எரியும் செம்பில் காற்று பட்டால் மெதுவாகக்களிம்பேறும். ஆசியா கண்டத்தில் இரும்பைக் கண்டு பிடித்து மக்களுக்கு வேண்டிய ஏனங்கள், தட்டுமுட்டு தளவாடங்கள் முதலிய கருவிகள் செய்யு முன் பண்டைக்கால முதல் செம்பு தான் எல்லாவற்றிற்கும் உபயோகப்பட்டு வந்தது, ஆதலினால் தமிழ்நாட்டில் வீட்டில் ஆளும் பித்தளைக்குடுவைகட்குச் செம்பு எனவும், பித்தளைக் குடங்கட்கு செப்புக்குடம் எனவும், குழந்தைகள் விளையாடும் சிறு ஏனங்கட்குச் சின்ன

செப்புக்களென்றும் பெயர் வழங்கப்படுகிறது. பண்டைய நாட்களில் சாசனங்களும் செப்பேட்டிலேயே எழுதி வந்தார்கள். கோயில்களில் கடவுளுக்கு உருவங்கள், கொடி மரங்கள், கும்பங்கள் (கலசங்கள்) கோயிலின் மேற் கூரைகள் முதலியன செம்பிலேயே செய்யப்பெற்றிருக்கின்றன. பண்டம் மாற்று வாணிபத்துக்கு பின்னர் நாணயங்களிலும் செம்பையே மிகுதியாக உபயோகித்து வந்தார்கள். செம்பின் வழியாக வெப்பமும், மின் சக்தியும் மிக விரைவாகச் செல்லும். ஆதலால் பிற்காலத்தில் வீடுகளில் சமையல் செய்யும் பானை சட்டிகளும், வென்னீர் காய்ச்சும் பானைகளும் செம்பினால் செய்யப்படுகின்றன.

வெப்பம் மிகுந்த காற்றுக்குச் செம்பின் நிறம் மாறாது. ஈரமுள்ள குளிர்ந்த காற்றுக்குச் செம்பு விரைவிற் கரையாகி நிறம் மாறும். செம்பில் கறை அதிகம் சேரச்சேர பச்சை நிறமான "களிம்பு" என்னும் விஷப் பொருள் ஓர் ஏடுபோல் செம்பின்மேல் உண்டாகும். அது கரிவாயு (கார்பன்) சேர்ந்த விஷ உப்பாகின்றது. இது காரமுள்ள தீ நீர் (திராவகம்) களால் நீங்கும். பொதுவாகச் செம்பு நல்ல தண்ணீரில் கறை பிடியாது. கடல் நீரிலாவது, உப்புகள் சேர்ந்த நீரிலாவது சிறிது சிறிதாகக் கறை பிடிக்கும். செம்பு விரைவில் தேயக் கூடியது, கப்பலின் அடிபாகத்தில் பலவகை நத்தைகள், கடல் மட்டிகள் முதலியன சேர்ந்து கப்பல் ஓட்டத்திற்குத் தடைபடாதபடி கப்பலின் அடிபாகத்தில் தைக்கப்படுகின்ற செப்புத்தகடு தண்ணீரில் செல்வதனால் தேய்ந்து விடுகின்றது. செம்பு பொட்டிலுப்பு தீ நீரில் (நைட்ரிக் ஆசிட்டில்) மிக விரைவில் கரையும், இரண்டு பங்கு செம்பும் ஒரு பங்கு பிராணவாயுவும் (ஆக்ஸிஜன்) சேர்ந்தால் சிந்தூரமாகும். பிராணவாயுவும் செம்பும் ஓரளவில் சமமாகச் சேர்ந்தால் கறு நிறமாகும் தாவரங்களாலாகிய சில தீநீர் (ஆசிட்) களாலும் கறை பிடிக்கும். தண்ணீர் கலந்த கெந்தகத்தீநீரிலாவது (சல்பியூரிக்

ஆசிட்) பொட்டிலுப்புத்தி நீரிலாவது அதிகக்கறை பிடியாது.

பித்தளை.

செம்போடு கலந்த லோகங்கள் பல வேலைகளுக்கு உதவுகின்றன. தற்காலம் வழக்கத்திலுள்ள பித்தளையில் செம்பு 66 பங்கும் துத்தம் 34 பங்கும் சேர்ந்திருக்கின்றன. இவைகளில் அளவுகளை வித்தியாசமாகக் கலப்பதால் பல விதமான பித்தளை, வெண்கலம், திரு, முறி எனும் உலோகங்களைச் செய்யலாம். விசேஷமாக பீரங்கிகளைச் செம்பு 90 பங்கும், தகரம் பத்து பங்குமாகச் சேர்த்து செய்வதாகத் தெரிகின்றது. உருவங்கள் செய்வதற்கு 91 பங்கு செம்பும், 6 பங்கு துத்தமும், இரண்டு பங்கு தகரமும், ஒரு பங்கு ஈயமும் கலந்து செய்கின்றார்கள். செம்பை வெடியுப்புத் திரீரில் (நைட்ரிக் ஆசிட்டில்) கரைத்து நீல நிறமுள்ளதும் பூக்கக்கூடியதுமான ஒரு வகை உப்பை உண்டாக்கலாம். இது மெத்தக் காரமும் இலேசில் பிடிக்கக்கூடியதுமானது. செம்பு சாமான்களின் மேல் வழக்கமாகப் பிடிக்கும் பச்சை நிறமான களிம்பு செம்பு சேர்ந்த ஒரு வகை உப்பு என்று முன்னமே சொன்னோம், செம்புத் தகடுகளில் காடியை இடுவதிலாவது, எலுமிச்சை திராட்சை முதலிய புளிப்பான பழச்சாறுகளைச் சேர்ப்பதிலாவது இக்களிம்பை நிறங்களுக்கு மிகுதியாக உபயோகிக்கின்றார்கள். பொதுவாகச் செம்பின் உப்புக்களும் மிகுதியாக நீலம் அல்லது பச்சை நிறமானவைகளே காணப்பட்டும் எடுக்கப்பட்டும் வருகின்றன. அவைகள் தண்ணீரில் கரையும். இவைகள் ஒரு விதமான கைப்பான உருசியை உண்டாக்கும். நெய்வகைகளில் செம்பின் களிம்பு கரையுமாதலால் நன்றாய்த் தேய்த்து மினுக்காத செப்புப் பாத்திரங்களில் சமைப்பது தீமையாகும். புளிப்புள்ள உணவுப் பொருள்களை செம்புப் பாத்திரங்களில் சமைப்பதால் களிம்பு ஆகாரத்தில் சேரும். ஆதலால் செப்பு ஏனங்களை சமையலுக்கு உபயோகிப்பது நல்லதல்ல, செம்புத் தாம்பாளங்க

ளில் கண்களுக்கு மைசெய்வதும் அக்கண்மைகளை செப்புச் சிமிழ்களில் வைத்துக்கொள்ளுவதும் நலமெனத் தெரிகின்றது. மேல் நாட்டார் செம்பை உள்ளுக்குச் சாப்பிடும் மருந்துகளாகச் செய்வதில்லை. வேறொரு மருந்துகளோடு சேர்த்து உள்ளுக்கு கொடுப்பதும் இல்லை. உணவுகளை செப்பேனங்களில் வைப்பதில்லை. செம்பு உப்புகள் மேல் உபயோக மருந்துகளாக படுகின்றன. செம்புத்தகட்டின் மேல் வெள்ளி,ரசம் படியும்.

துருசு அல்லது மயில்துத்தம்.

செம்பைக் காற்று வீசுமிடத்தில் சிவக்கக் காய்ச்சித் தண்ணீரில் தோய்ப்பதால் கருத்த செதில்களாகும். செம்பில் உயிர்வளி (பிராணவாயு) கலந்து உண்டாகும் உப்பே முதன்மையானது. துருசு அல்லது மயில் துத்தமென்று சொல்லும் ஒரு பொருளும் செம்பு உப்புக்களில் ஒன்றாகும் பிங்கான், கண்ணாடிகளில் பச்சை நிறம் உண்டாவதற்குச் செம்பு உப்பாகிய துருசு உபயோகமாகின்றது. ஒரு செம்புத்துண்டை குறட்டினல் பிடித்து விளக்கில் காய்ச்சி சிக்கிரம் ஆறவிடும்போது சிவந்த நிறமாக உண்டாகும் பொருளால் கண்ணாடிக்குச் சிவப்பு நிறம் உண்டாக்கப்படுகின்றது. செம்பை காரமுள்ள சல்பியூரிக் ஆசிட் ஒன்னும் கெந்தகத் தீநீரில் சேர்த்துக் காய்ச்சுவதால் துருசு என்னும் ஒரு வகை உப்பு உண்டாகின்றது. இது செம்பின் உப்பில் முக்கியமானது. இத்துருசு நல்ல நீல நிற முள்ள கட்டிகளாகக் கட்டும். நாலு பக்கு தண்ணீரிலும், இரண்டு பங்கு வெந்நீரிலும் கரையும். துணிகளுக்கு நிறம் கொடுப்பதற்கும், செம்பிலிருந்து உப்புக்களெடுப்பதற்கும், பாட்ரி வேலைகளுக்கும் துரிசு மிகுதியாகச் செலவாகின்றது. துருசு கரைந்திருக்கும் நீரில் ஊறியமரம் உளுக்காது. துருசு கலந்த வர்ணம் பூசப்பட்ட கதவு முதலியவைகள் பூச்சுப் பிடிக்காது. தசை தோல் முதலிய பிராணியப் பொருள்களும் கெடாது. செம்புத்துருசை இரணங்களில் வளரும் கெட்ட ஊனைக் கரைப்பதற்கும் உடையாத சிரங்கு

வாய் திறப்பதற்கும், மூல முளைகளை வேகவைத்தெடுப்பதற்கும் வைத்தியர்கள் உபயோகிப்பது வழக்கம். ஆனால், எரிச்சலும் நோயும் அதிகமாகும். நீலநிறமான துருசைத் தின்றால் வாந்தியை உண்டாக்கும். துருசை அருந்தினால் வாந்தியையும், பேதியையும், களைப்பையும் மிகுதிப்படுத்திக் கொல்லும் நஞ்சாகின்றது.

செம்புக்களிம்பு, துருசு முதலியவைகளுக்கு முறிவு

செம்பு உப்பாகிய துருசை அளவுக்குமீறி களிம்புடன் தெரிந்தோ தெரியாமலோ அருந்தினால் உடனே இளஞ்சூடான வெந்நீரை மிகுதியாக குடிக்கும்படி உள்ளுக்குக் கொடுத்து உடனே கைவிரலைத் தொண்டையில் படும்படி விட்டு வாந்தியெடுக்கச் செய்யவேண்டும். எப்சம் சால்ட் அல்லது மாக்னிஷியம் சல்பஸ் என்னும் பேதி உப்பைக் கரைத்தும் வாந்தியாகக் கொடுக்கலாம். ஆமணக்கெண்ணெய், பச்சை முட்டையின் வெள்ளைக்கரு, பால், புளித்த எருமை மோர், எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச் சாறு, தேன், சர்க்கரை, இவைகளைக்கலந்து கொடுக்கலாம். சீனிச் சர்க்கரையும், அயச்செந்தூரமும் சேர்த்துக் கொடுப்பதும் நெல்லிக்காய்ச் சாற்றை உள்ளுக்குக் கொடுப்பதும் நல்ல முறிவு. துருசைச்சுட்டுப் பொடித்து தேள் கொட்டின இடத்திலும், பாம்பு கடித்த இடத்திலும் வைத்துத்தண்ணீர் விட்டால் விஷம் நீங்கும்.

இங்கிலாண்டு தேசத்தில் முதன் முதல் ஒரு ஸ்திரீயை லார்டு மேயராகத்தெரிந்தெடுக்கும் பெருமை லிவர்பூல் முனிசிபல் சபைக்கேற்பட்டிருக்கின்றது. மிஸ்மார்க்ரெட் பீவன் இப்பொழுது ஏகமனதாகலார்டு மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றாள். அவளுக்கு வயது 50. லிவர்பூலின் சிறுதாயாரென இவளை எல்லோரும் கூப்பிடுவது வழக்கம். சென்ற 25 வருடங்களில் 5 லட்சம் பவுன் வரையில் இவள் வசூல் செய்து லிவர்பூலிலுள்ள முடவக்குழந்தைகளுக்காக உபயோகித் திருக்கின்றாள். அது தவிர வேறு பல தர்ம ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி அவற்றின் மூலம் சுமார் லட்சம் ஜனங்களுக்குமேல் நன்மை யடையுமாறு செய்திருக்கின்றாள். லிவர்பூலில் இவள்தான் முதன் முதலாக நியமிக்கப்பட்ட ஸ்திரீ கௌரவ மாஜிஸ்டிரேட்.

தமிழ்

(ஸ்ரீரங்கம் T. R. ஸ்ரீநிவாசன் B.A., எழுதியது.)

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான சாதனங்கள் பல. அவற்றுள்ளும், அத்தேசத்திற் குரித்தான தாய் பாஷையின் அருமை, பெருமை போற்றிப் பாராட்டப் படுவதன் காரணமாய் அப் பாஷைக்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சிப்பான்மையையே அந்நாட்டு நலம் பெரிதும் சார்ந்ததாயிருப்பது இற்றை நாள் தேர்ந்த அனுபவ உண்மையாகும். இன்னும், அந்நாட்டின் அருமை பெருமை, நாகரீகம் முதலியவற்றை அது கொண்ட நூல்கள் மூலமாயும், அவற்றின் வாயிலாகக் காணும் மேதைகளின் அரும் பெருஞ் செயல்களைக் கொண்டுமே சாலவும் அறிந்துகொள்ள இயலும். பண்டைக் காலத்து, நம் தமிழ் நாடு எத்துணைச் சிறப்போடும் விளங்கியது என்பது பண்டைத் தமிழ் நூல்களை நுண்ணிதின் ஆராய்வோருக்குத் தெற்றெனப் புலப்படாமற் போகாது. நம் முன்னோர் கருந்தனமாக வைத்துப் போந்துள்ள அந்நூல்களிற் காணும் அரிய செய்திகளை உணர்ந்து, அவற்றின் வழி ஒழுகலால் எய்தலாகும் நீடிய நிறைந்த வாழ்வும், அறிவு விசாலமும் இன்றிப் பெரிதும் ஈனமானதொரு நிலைமையில் நம்மவர் தற்காலம் பரிதபிப்பது பெரிதும் வருந்தத் தக்க விஷயமேயாகும். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, நம் தமிழ் நன்னாடு அரசியல், கல்வி, விவசாயம், வர்த்தகம், அறிவு, ஒழுக்கம், செல்வம், வீரம், அறநெறி முதலான துறைகள் யாவற்றிலும் எத்துணை மேம்பாடான வெற்றியுடையதாய் விளங்கியது எனப் பலவாற்றானும் அறிந்து, அத்தன்மையதான நந்தமிழ் நாட்டுத தொன்மைப் பெருமையில் ஈடுபட்டுப் பரவச மெய்தி, இக்காலம் பெரிதும் பொலிவிழந்துள்ள அதன் முன்னேற்றத்தில் ஒரு சிறிதும் கருத்தைச் செலுத்தாமல் வாளாவிருக்கும் தமிழ் மக்களின் மனோ நிலைமைதான் என்னே! நம் தெய்வத் திருநாட்டின் பண்டைப் பெருமை வரலாறுகளை யெல்லாம் செவ்விதின் உணர்ந்து, அதற்குத்தக நம்மை நாம் சீர்திருத்திக் கொள்ளுங் காலத்துத்தான் நாம் அறிவாளிகளாகக் கருதப்பட்டு, சுயேச்சைச் சுகவாழ்வு நடாத்த முடியும். எனவே, நாட்டின் முன்னேற்றம் தாய்ப் பாஷையின் செவ்வியையே பெரிதும் பொறுத்ததா யிருப்பது வெள்ளிடை மலை.

தமிழ் நாடு.

" நீராருங்கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதகண்டமதில்
தக்க சிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமு மதிற் சிறந்த திரவிட நற்றிரு நாடும்***."

ஆகவே, திராவிட தேசமே தமிழகம் எனப்பட்டது. மேலும்,

" குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனு நான் கெல்லையினிருந்தமிழக் கடலுள்" எனத் தமிழ் நாட்டின் எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தமிழ் வழங்கும் நாட்டிற்குள்ளும் செந்தமிழ் நாடு, அதைச்சேர்ந்த

" தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன் வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்" இது நிலங்கள் என இருவகைத் தாய பிரிவுகளை அறிஞர் கூறுப செந்தமிழ்கொடுந்தமிழ் நாடு இன்னது என்பதை

" செந்தமிழ் நாடே.
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்திர பாண்டிய னெனுந் தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்

மங்கலப் பாண்டி வளநாடென்ப" என்பதால் தெளிவாய் உணரலாகும். எது எவ்வாறாயினும், தமிழ் வழங்கிய நிலம் பாண்டிய நாடு, சோழ நாடு, சேர நாடு, நடு நாடு, தொண்டை நாடு என்பதில் எட்டுணையும் ஐயமிலதாம். இவற்றுள்ளும், பாண்டிய நன்னாடே தமிழணங்கு வீற்றிருந்து அரசு செலுத்திய இடமாதல் பற்றி தலை சிறந்ததாமென்க.

தமிழ் வரலாறும், பெருமையும்.

" வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, அதற்கிணையாத்
தொடர்புடைய தென் மொழியை உலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்
கடல் வரைப்பின் இதன் பெருமை யாவரே கணித்தற் பாலார்."

(காஞ்சிப்புராணம்.)

"விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனுள்
வடமொழிக் குரைத்து ஆங்கியல் மலயமாமுனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக் கெதிராக்கிய செஞ்சொல்."
(திருவிளையாடற் புராணம்)

மேலும், "மறை முதற் கிளர்ந்தவாயான் மதிமுகிழ் முடித்தவேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடையனைத்தும் வென்றாரியத்தோ(டு)
உறழ்தரு தமிழ் * * * *"
(சீகாளத்திபுராணம்).

எனவே, "கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ?"

இன்னும், "உலகத்தோர் புகழ்வதான உத்தமத்தமிழணங்கை
விலகரும் அருளின் மிக்கோர் விமலனை வாழ்த்தவேண்டி
அலகில் பல் யுகங்களே நம் ஆயுளாய் மும்மைத்தாய [தம்
உலகமோருடம்பாய் அந்த உடம்பெல்லாம் வாயாய் நித்
பலகவிமாலை சூடிப்பரவினும் முடியுங் கொல்லோ?"

மற்றும் 'மனோன்மணிய' ஆசிரியர்,

" * * * * * *
அத்திலக வாசனை போல் அனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ் மணக்க விருந்த பெருந்தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத்துதித் தெழுந்தே ஒன்று பல வாயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துவமே."

என்று வெகு அழகாகச் சிலாகித்துப் பாடியுள்ளார்.

பின்னும், "நால்வர் நான்மணிமாலை" என்ற நூலில் உயர்வு நவிற்சியணியாய்,

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரணமொழியோ?

ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனே ?
யாதோ சிறந்த(து)? என்குவீராயின்,
வேதம் ஓதின், விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம் ;
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடு மணற் கேணியின் சுரந்து நீர்பாய,
மெய்ம் மயிர் பொடிப்ப, விதிர் விதிர்ப் பெய்தி,
அன்பர் ஆகுநர் அன்றி,
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

என்று தமிழின் பெருமை அளவுக்கும் மீறிப் புகழப் பட்டிருப்பதுங் காண்க. எனவே, இதுகாறுங் கூறியவற்றால் தமிழின் உற்பத்தி ஸ்தானமும், வடமொழிக்கும் அதற்குமுள்ள சாம்யமும், ஏனைய சொற்களினும் அதன் ஏற்றமும், தெய்வத்தன்மையும், மற்றும் அளப்பரிய பல மேம்பாடுகளும் உரைத்தாயிற்று. இவற்றையே இன்னும் சுருக்கமாக,

“ * * * * * *

யாரறிவார் தமிழருமை என்கின்றேன் என்
அறியாமை யன்றோ ? மதுரை மூதூர்
நீரறியும் நெருப்பறியும் : அறிவுண்டாக்கி
நீ அறிவித்தாலறியும் நிலமுந்தானே.” என தெய்வத்தன்மைக் கான சான்றுகளோடும் ‘மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி’ கூறிப் போந்தது. ஆகவே,

“பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்றபாவை மருங்கிலே வளருகின்றாள்”

என்பது தெள்ளிதின் போதரும்.

“தமிழ்” என்பதன் பொருள்.

“தமிழென்பது இனிமை, நீர்மை” என நிகண்டு கூறும். செவிக்கினிய, வாய்க்கினிய செஞ்சொற்களாலேயே அமைந்து கிடப்பது தமிழ். மேலும், வடமொழியைப் போலின்றி சாந்த

30

மும் தண்மையும் விரவிய நடையது. வடமொழி நடையை நாம் மிருகேந்திரனை சிங்கத்தின் காம்பீர்யத்திற்கு ஒப்பிடுவோமானால் தமிழ் மொழி நடையைப் பக்ஷிகளுள் தலைமைத்தான ஹம்ஸத்தின் தண்ணிய மென்மையான நடைக்கே ஒப்பிடல் ஏற்புடைத்தாகும். தமிழ் என்ற சொல் இனிமை முதலிய பொருள் தருதலைச் செய்யுட்களில் பல இடங்களினும் காணலாகும். இனிமை என்ற பொருளைப்பயப்பதான மொழியே இடுகுறிப் பெயராக அமைந்த பாஷை இன்பமயமாய்த்திகழ் வதற்கு என்ன சந்தேகம்? இனி 'தமி' என்றும் 'ழ்' பதம் பிரித்துப் பொருள் கொள்ளுங்கால் மற்றுமொரு விசேஷார்த்தம் கிடைக்கிறது. அதாவது, தனக்கெனவே சிறப்பாக ழகரவொற்றை யுடையது என்பதாம். எவ்வாறெனில், இதர பாஷைகள் எதிலுங்காணக் கிடைக்காத 'ழ' என்ற எழுத்தைத் தனக்கெனவே பெற்றுள்ள 'ழ' கரம் எத்துணை மென்மையும், தண்மையும், அழகும் ஒருங்கமைந்த தொரு எழுத்து என்பது சொல்லாமலே விளங்கும். எனவே, தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திப்பது தீந்தமிழ்.

முத்தமிழ்

நிற்க, தொன்றுதொட்டே தமிழ்மொழி இயல், இசை, நாடகம், என்னும் மூன்று பெரும் பிரிவுகள் கொண்டது என அறிஞர் கூறுவர்.

இயற்றமிழ் என்பது வசனமும் செய்யுளும், இதனிடை இலக்கிய இலக்கணங்களாகிய யாவும் அடங்குமென்க. எனவே, இது 'செந்தமிழ், கொடுந்தமிழ்' என்ற வகையினும் படுதலுமொக்கும். பழமையான சங்கச் செய்யுட்களும், அவற்றின் உரைகளும் இடைக்காலத்திய 'கம்பராமாயண' மாதிய நூல்களும் அவற்றின் உரைகளும் இக்காலத்து வெளியாகும் செய்யுள் நூல்களும் ஆகிய யாவும் இயற்றமிழாம். பின்னது இரண்டினுக்கும் காலத்தில் முற்பட்டது பற்றியும், உயிரென விளங்குவது காரணமாகவும் இது மூன்றனுள்ளும் முன் வைத்தெண்ணப்படலாயிற்று.

இசைத்தமிழ் யாதெனில், பண்ணொடு, கலந்துந் தாளத்தொடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களாலும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களாலும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன் கண், கீர்த்தனங்களும், வரிப்பாட்டுகளும், சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்மாங்கி, முதலியனவும், அடங்கும். அன்றியும், இயற்றமிழ்ச் செய்

யுட்கள் இசையெடுத்துத் தாளமறுததுப் பாடப்பெறின் அவை இசைத்தமிழின்பாற் படும். எனவே, இராகத்தோடு தாளமும் உடன் கூடிய வழியுள்ள யாவும் அப்பிரிவினதாம். செய்யுள் இலக்கணங்களும், ராகவகைகளும், தாளவரிசைகளும் ஆகிய இவற்றில் நல்ல புலமையுடையோரே இதை அமைக்கற்பால ஆற்றல் வாய்ந்தவர். முற்காலத்து, தமிழகத்தே வழங்கிய 'பெரு நாரை,' 'பெருங்குருகு,' 'இசைநுணுக்கம்,' முதலியனவும் இடைக்காலத்து 'தேவாரம்' முதலானவையும், இன்று வெளிவந்துலவும் 'கந்த புராணக் கீர்த்தனை,' 'பெரிய புராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை முதலியவைகளுமாகிய யாவும் இசைத்தமிழாம். நாடகத்தமிழுக்கு முன் தோன்றினதாலும் அதனுக்குச் சிறப்பும், விளக்கமும் தருவதாலும் அதற்கு அதனிலும் முதல் நிலை. ஆகவே, நாடகத்தமிழிற்கு இயற்றமிழும், இசைத்தமிழும் இன்றியமையாச் சிறப்பினவாம்.

இனி, இவ்விரண்டினடியாகப் பிறந்த நாடகத்தமிழ் கேள்வி நலமேயன்றிக் காட்சியின்பமும் உடன் நல்குவதாயிருக்கிறது. இதுபற்றியே பிறநாடுகளிலுள்ள பிற பாஷைப் புலவர்கள் நாடகங்களைப்பொன்னே போல் போற்றுகின்றனர். நாடக இலக்கிய நூல்கள் மலிந்துள்ள நாடுகள் பெரும்பேற்றை யுடையனவாய் இயங்குவதை நாம் இன்று அனுபவமாய் உணர்கிறோம். நாடகம் முதலில் உண்டானது மத விடயமாகவே என்பது உலகம் பூராவுக்கும் ஒக்க அமைந்ததொரு விஷயம். அது கடவுளர் (மத விஷயமான) திருவிழாக்காலங்களில் ஆடல், பாடல் இரண்டும் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. இதிகாசபுராணக் கதைகளைப் பாமரர்களுக்குப் புகட்டும் பொருட்டு முத்தமிழ், (ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம்) நாற்கவிகளில் பெரிதும் தேர்ச்சியுடையோனாய், சங்கீத விற்பன்னனாய், வனப்புடையோனாய்க் கசடறக் கற்ற ஒருவன் பெருநூல்களினின்றும் தலைவன் தலைவியரது கூற்றை நன்குணர்ந்து பின்பு நவரசங்களுடன் அவற்றை நடித்துக்காட்டல் நாடக இலக்கணம். நீண்ட காலத்திற்கும் முன்னரே சைனரது விரோத பாவத்தாலும், இயற்றமிழ்க்காப்பியங்களின் மலிவாலும் பண்டிதராயினோர் கடிந்து பாமரர் கைப்பட்டுத் தெருக் கூத்தாக இழிந்து விட்டமையானும் அதன் பெருமை தேய்ந்து மாய்ந்து போய்விட்டது. நற்சுவை பொருந்திய காப்பியங்களை இசைத்தமிழில் கல்லாது வர்ணமெட்டே பிரதானமாகக் கொண்டு சரித்திரங்களை முற்றிலும் மாறாக நடத்தும் நாடகங்களே இற்றை நாள்

நாடக லட்சணம். பழமையான நாடக நூல்கள் ' பரதம் ' 'அகத்தியம்; ' முறுவல்,' 'சயந்தம்,' ' குணநூல்,' ' செயிற்றியம்.' 'மதிவாணர் நாடகத்தமிழ்நூல்,' ' கூத்தநூல்.' 'நூல்' என்பனவெல்லாம் மறைந்து போயின. இன்று பண்டித சிகாமணி சாமிநாதையர் பெருமுயற்சியால் 'சிலப்பதிகாரம் மட்டுமே தப்பித்தவறி வெளியேறிவிட்டது. அவர்க்குத் தமிழுலகம் எங்ஙனே கைம்மாறு செய்ய வியலும் ? உழைத்த உள்ளத்திற்கு இன்பமும், ஊக்கமும் விளைத்து நன்னெறிகளைக் காட்டி யுதவலே நாடகத்தின் நோக்கம். ஆனால், இற்றைநாள் நாடக சாலைகள் பெருத்த பெருத்த தீங்குகளை உற்பத்தி செய்யும் இடங்களாய் இருப்பது மிகவும் பரிதபித்தற்பாற்றே. விரிவஞ்சி, மேலே விஷயத்தைத் தொடர்ந்து எழுதுவோம்.

முச்சங்கங்கள்.

அனாதி காலத்திலேயே, தேனினும் இனிய தமிழ் மொழியானது சிவபெருமானால் அகத்தியருக்கு உபதேசிக்கப்பட்டு தென்னாட்டில் பொதியில் மலையின் கண் நின்றும் பல திசைகளிலும் பரவிப் புகழ் பெறலாயிற்று என முன்னமே கூறியாயிற்று. இனி, தமிழ் மொழி பயிலும் நாடுகளில் மிகச் சிறந்ததான பாண்டிய நன்னாட்டிலே திகழ்ந்த தலை, இடை, கடை என்னும் முத்தமிழ்ச் சங்கங்களைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வம். தமிழ்மொழி தலை சிறந்து புகழுடன் விளங்குமாறு செய்தவர்கள் அரசுச் செல்வத்தோடு கல்விச் செல்வமும் ஒருங்கே யமைந்த பாண்டிய மன்னரே யாவர். முதல் ஊழியின் இறுதியில், தேவர் அனைவருடையவும் வேண்டுகோளின்படி தென்றிசை திருத்திப் பணி செய்யப் போந்த அகத்திய மாமுனிவர், பொதியமலையை வாசஸ்தானமாக்கிக் கொண்டு தொல்காப்பியனார் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த திரண தூமாக்கினியார் பனம்பாரனார், அதங்கோட்டாசிரியர் முதலான நன் மாணாக்கர் குழாங்களுடன் பெருமையுடன் இனிது வீற்றிருக்கும் நாளிலே, பாண்டிய நாடாண்ட காய்சின வழுதி என்னும் அரசனால் வெகு வாய்ப் பணிந்து வேண்டிக் கொள்ளப் பட்டதன்மேல் மிகவும் மன மகிழ்ச்சியுடன் தமிழ்ப் புலமை மிக்கார் பல பெரியாரை மதுரையம் பதியிலே அழைத்து ஒரு சங்கத்தை நிறுவுமாறும், தாம் அங்குப் போந்து தலைமை வகிப்பதாயும் கூறியருளினார். பணி தலைமேற் கொண்ட அவ்வேந்தனது உலையா முயற்சியின் நற்பயனால் அங்ங

னமே சின்னுட்களில் ஒரு தமிழ்ச்சங்கம் ஸ்தாபிதமாயிற்று. அதுவே தலைத் தமிழ்ச் சங்கமாகும். அம்முதல் சங்கத்து அருந்தவ முனிவராம் அகத்தியர், திரிபுரமெரித்த விரிசடை அண்ணல் குன்றெறிந்த குமரவேள், நிதியின் கிழவர் இன்னோரன்ன ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் தெய்வப் புலவர் வீற்றிருந்து காய்ச்சின வழுதியின் வேண்டுகோளுக்கிசைந்து தமிழ் ஆராய்ந்தனர் என அறிஞர் கூறுப. மற்றும், மார்க்கண்டேயனுர், கௌதமனுர், வான்மீகனுர் முதலிய முனிவரரும் பற்பல நூல்களியற்றித் தமிழுலகிற்கு அரிய பெரிய நன்மை புரிவாராயினர். அகத்தியம் என்ற பேரிலக்கணம் அகத்தியனுர் அருளியது. அது முத்தமிழின் பாகுபாடுகளையும் வரை யறுத்து ஐயந்திரிபற உணர்த்த வல்லதொரு அரிய கிரந்தமாகும். தலைச் சங்ககாலத்து தமிழ்மொழிக்குப் பிரமாண நூல் அஃதேயாகும். மேலும், அச்சங்க காலத்தியற்றப்பட்ட அரிய நூல்களில் ஒரு சில, பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியனவாம். தலைத் தமிழ்ச் சங்கம் சுமார் 4500 ஆண்டு நிலை பெற்றிருந்ததாக நூல்கள் கூறும். அச்சங்கத்தைப் போற்றி ஆதரித்தளித்தவர் காய்சினவழுதி தொடங்கி கடுங்கோன் ஈறுன எண்பத்தொன்பதின்மர் பாண்டியவேந்தராவர், அவருள்ளும் கவியரங்கேற்றினுர் எழுவர் ஆவர். அன்னோரில், புலமை சான்ற சயமாகீர்த்தி எனும் பாண்டிய அரசன் தலைச் சங்கத்தை கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனன். தமிழ் மொழியின் ஈடேற்றத்திற்கெனப் பலவகையானும் பாடுபட்டவர்களில் அவனே சிறந்தவன்.

சிறிது காலங் கழிதலும், கன்னிததண்டமிழ் நாட்டைக் கடல் கொள்ள லாயிற்று. அது காரணமாங், தலைச்சங்கத்திேைடு தென் மதுரையும், அச்சங்கத்துத் தோன்றிய அரிய பல நூற்களும் ஆழி வாய்ப்பட்டு மறைந்தொழிந்தன. இது நிகழ்ந்து சின்னுள் கழிந்த பின்பு, தமிழ்பால் மிக்க ஆர்வ முடையோனுய் விளங்கிய வெண்டேர்ச் செழியன் என்பானெருவ பாண்டியன், அகத்திய முனிவரின் அருளை முன்னிட்டே திரும்பவும் கபாடபுரம் என்னும் தலத்தில் புதிதாய் இடைச்சங்கம் எனப் படுவதைப் பெரு முயற்சியோடும் அமைத்தான். இடைச் சங்கத்தும் அகத்தியனுரே அவைத் தலைவராய்ப் பொலிந்தார். அவரோடும் அச்சங்கம் வீற்றிருந்தார் தொல்காப்பியனுர், இருந்தையூர்க் கருங் கோழி மோசியார், வெள்

ளூர்க் காப்பியனுர், சிறு பாண்ட ரங்கனுர், மதுரை யாசிரியன் மாறனுர், துவரைக் கோமான், கீரந்தையார் முதலிய ஐம்பத்தொன்பதின்மர் அறிவுடைப் புலவராவர். இடைச்சங்கம் சற்றேறக் குறைய 3700 வருடங்கள் நிலை பெற்றிருந்ததாய் மேதையோர் கூறுவர். அவ்விடைச் சங்கம் வெண்டேர்ச் செழியன் முதல் முடத் திருமாறன் ஈறுன ஐம்பத்தொன்பது பாண்டிய மன்னர் ஆதரணையில் இருந்த தெனவும், அருள்கவி யரங்கேற்றினுர் ஐவர் எனவும் அறியக் கிடக்கின்றது. பல்லாண்டுகள் ஆகவும் கபாடபுரத்து ஏற்பட்ட இச்சங்கமும் அழிதலுற்றது. இடைச் சங்ககாலத்து தொல்காப்பியமே முதன்மையான இலக்கண நூலாய் விளங்கியிருந்தது.

தலை, இடைச்சங்க நூல்கள் யாவும் அக்காலத்திலேயே அழிந்தொழிந்தமைபற்றி அந்நாள் தமிழ் நாட்டின் நாகரிக மேம்பாடு நமக்கு ஒரு சிறிதும் விளங்குவதின்ருயிற்று.

இனி, மூன்ருவதாய கடைச்சங்கம் தற்போதுள்ள மதுரையம் பதியில் முடத்திருமாறன் என்னும் பாண்டிய ராஜனுல் காணப்பட்டது. அச்சங்கத்துத் தமிழாராய்ந்த புலவர் பெருமக்கள் சிறு மேதாவியார், சேந்தம்பூதனுர், அறிவுடையரனுர், பெருங்குன்றூர்க்க்கிழார், இளந்திருமாறனுர், மதுரை யாசிரியர் நல்லந்துவனுர், மருதனிளநாகனுர், நக்கீரனுர் முதலான நாற்பத்தொன்பதின் மராவர். கடைச்சங்க நூல்கள், முத்தொள்ளாயிரம், எட்டுத்தொகை (1 நற்றிணை, 2 குறுந்தொகை 3, ஐங்குறுநூறு 4 பதிற்றுப்பத்து 5, பரிபாடல் 6 கலித்தொகை 7 அகநானூறு 8 புறநானூறு), பத்துப்பாட்டு (திருமுருகாற்றுப்படை 1 பொருநராற்றுப் படை 2, பெரும் பாணுற்றுப்படை 3 சிறுபாணுற்றும்படை 4. முல்லைப்பாட்டு 5, மதுரைக் காஞ்சி 6, நெடுநல்வாடை 7, குறிஞ்சிப் பாட்டு 8, பட்டினப்பாலை 9, மலைபடுகடாம் 10) பதினெண் கீழ்க் கணக்கு (நாலடியார் 1 இனிது நாறபது 2 இன்னு நாற்பது 3 கார் நாற்பது 4 களவழி நாற்பது 5 ஐந்திணையைம்பது 6 ஐந்திணையெழுபது 7 திணை மொழியைம்பது 8 திணைமாலை நூற்றைம்பது 9 திருக்குறள் 10 திரிகடுகம், 11 ஆசாரக் கோவை, 12 பழமொழி 13 சிறுபஞ்ச மூலம், 14 முதுமொழிக் காஞ்சி, 15 எலாதி, 16 கைந்நிலை 17 18) நாண்மணிக்கடிகை பிறவுமாம். இவறுள் பலவும் கிடைத்திருப்பதால் தமிழ் நாட்டுப் பழமையான நாகரிகம் ஒருவாறு அறிய நமக்குச் சாத்தியமாயிருக்கிறது. கடைச்சங்கத்தார் ஆதாரமாய் எடுத்தாண்ட நூல்கள் பெரும்

பான்மை தொல்காப்பியமும், சிறுபான்மை அகத்தியமுமாமென்க. கடைச் சங்கத்தின் வாழ்நாள் ஏறத்தாழ 1850 ஆண்டென மேலோர் கழறுவர். அதனைப் போற்றிப் பரிபாலித்த பாண்டிய அரசர் முடத்திருமாறன் தொடக்கமாய் உக்கிரப் பெருவழுதி ஈறான நாற்பத்தொன்பதின்மர் எனவும் அவருள் புலமை சான்றோர் மூவரெனவும் கூறுவர் அறிவுடையோர். கடைச் சங்க நூல்களே இன்று தமிழ்மொழியின் உயிர்நிலையென விளங்குகின்றன. தமிழணங்கு பண்டைச் சிறப்பெய்தித்திகழும் நாள் இனி வருங் காலத்து எந்நாளோ? அறிய கில்லேம்.

*   *   *   *   *

பாண்டியமன்னர் மட்டுமேயன்றி கரிகால் வளவன் ஒத்த சோழ மன்னர் பலரும், கடையெழுவள்ளல்களும் தமிழ்மொழி முன்னேற்றத்திற்காகப் பட்ட அரும் பெரும் பாடுகள் இயம்பும் திறத்தனவல்ல. இயற்றமிழோடு, இசைத்தமிழும் நாடகத்தமிழும் அக்காலத்து நன்னிலைமையிலிருந்தன வென்பது பலவாற்றானும் அறிய முடிகின்றது. அந்நாள் இயற்றப்பட்ட இசைத்தமிழ் நூல்கள், இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்ச பாரதீயம், பஞ்சமரபு, பெருங்குருகு, பெரு நாரை முதலியனவாகும். நாடக நூல்களோவெனில் குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பரதசேனாபதீயம், பரதம், மதிவாணனார் நாடகத தமிழ் நூல், முறுவல் ஆதியன. திருமாவளவன் காலத்தை, The Golden Age of Tamil Literature என உரைத்தல் பெரிதும் தகுதியுடையதாகும்.

பாண்டியரையும் சோழரையும் போலவே சேரரும் தமிழ்மொழி வளர்த்துப் பெருமை படைத்தனர் என்பதைப் பண்டைத் தமிழ் நூல்கள் வெளியிடா நிற்கின்றன.

தமிழ் நாட்டு வேந்தர் பலரானும் நன்கு மதிக்கப்பட்டு அவ்வப்பொழுது நம் புனிதமான தென்னாட்டிலே தோன்றி எத்திசையும் புகழ் மணக்க விளங்கிய தெய்வப் புலமை படைத்த திருவள்ளுவர், ஔவை, கம்பர், புகழேந்தி, ஒட்டக் கூத்தர் முதலான கவிஞர்களின் தொகையும், அவர்கள் உலகுய்ய வெளியிட்டருளிய நூற்களின் சங்கியையும் எண்ணிறந்தனவாம்.

(தொடரும்.)

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்

(ஸ்ரீமான் சீனி. வேங்கடசாமி எழுதியது.)

4-வது அத்தியாயம்.

மலை வாழ்க்கை.

யசாஜி சென்ற பிறகு, நட்டாஜி மிகவும் களைப்படைந்து பலவீனப்பட்டிருப்பதை யோகானந்த சுவாமிகள் அறிந்தார். உடனே அவனுக்கு ஆகாரங் கொடுத்து உண்ணச் செய்து சாப்பிட்டான உடன் சிறிது நேரம் படுத்து இளைப்பாறும்படிச் சொன்னார். நட்டாஜி, கரடுமுரடாயிருந்த கற்றரையின்மேல் கம்பளியை விரித்துப் போட்டு அதன்மேல் படுத்தான். அப்பொழுது காற்று சுகமாக வீசியது. சற்று நேரத்திற்குள் அவன் தன்னை மறந்து உறங்கினான். அலுப்புத்தீர உறங்கி எழுந்தபிறகு அவன் சற்று உற்சாகத்தோடு காணப்பட்டான். அப்போது மாலை நேரமாயிற்று. சூரியன் மேற்கில் சாய்ந்து மறைந்து கொண்டிருக்கிறான். அந்தி மாலை அழகுடன் தோன்றுகிறது. சுவாமிஜி, நட்டாஜியை அழைத்துக் கொண்டு மலைமேற் சற்றுதூரம் உலாவச் சென்றார். அங்கு தோன்றிய மலைக்காட்சிகள் எல்லாம் நட்டாஜியின் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியை யளித்தன. அவர்கள் இருவரும் ஒரு நீரூற்றண்டை சென்றார்கள். அவ்வூற்றில், கண்ணாடி போன்ற தெளிந்த தண்ணீர் சுரந்து வழிந்தோடிக் கொண்டிருந்தது. சுவாமிஜி அதை அவனுக்குச் சுட்டிக் காட்டி "இந்த நீரூற்றுதான் இந்த மலையில் வசிக்கும் ஜனங்களுக் கெல்லாம் தண்ணீர் கொடுத்து உதவுகிறது" என்று சொன்னார்.

பின்னர், சுவாமிஜியவர்கள் அங்குகாணக்கூடிய இயற்கைக் காட்சிகளை யெல்லாம் நட்டாஜிக்குக் காட்டினார். அவர்களிருக்கும் மலையுச்சியிலிருந்து இரண்டாயிரம் அடி கீழே பரந்து விரிந்த நிலப்பரப்பில் மரங்களடர்ந்த தோப்புகளும் வயல்களும் பச்சைப் பசேலென்று காணப்பட்டன. இவ்விதம் காணப்படும் தோப்புகளுக்கிடையே கிராமங்களிலுள்ள உயரமான சில கட்டிடங்கள்

காணப்பட்டன. அக்கட்டிடங்களில் ஒன்றை சுவாமிஜி நட்டாஜிக்குச் சுட்டிக் காட்டினார். “அதோ தெரிகிறதே அந்தக் கட்டிடம்! அந்த இடம்தான் உன் பெற்றோர் வசிக்கிற சௌக்கிராமம்” என்று அவர் நட்டாஜிக்குச் சொன்னார். நடடாஜி அந்த இடத்தை ஆவலோடு பார்த்தான். அப்போது தன் தாய் தந்தையர், சிநேகிதர், சுற்றத்தார் முதலியவர்களைப் பற்றிய எண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றின. தன் பெற்றோரையும் நண்பர்களையும் விட்டுப் பிரிந்து ஒரு குற்றவாளியைப் போல் மறைந்து வாழ்கிறதன் நிலையை நினைத்து மனங்கலங்கினான். இத்துடன், பீஜப்பூர் சிப்பாய்களால் கவர்ந்து போகப்பட்ட தன்சகோதரி கங்காபாயைப் பற்றிய எண்ணங்களும் அவன் மனத்தில் அப்போது தோன்றின. தோன்றவே, முகம்மதியர்களைப் பழிவாங்க வேண்டும் என்றும் பீஜப்பூர் சுல்தானின் அரசாட்சியை உதறித் தள்ளிவிட்டு மகாராட்டிர தேசத்தில் சுய ஆட்சியை நிலை நிறுத்தி ஜனங்களின் சுதந்தரத்தைக் காப்பாற்ற வேண்டும் எல்றும் தனக்குள் உறுதியுடன் வஞ்சினங் கூறிக் கொண்டான். இவ்விதம் தன் கிராமத்தின் காட்சியும் அது சம்பந்தமாகத் தன் மனத்தில் தோன்றிய எண்ணங்களும் அவனுக்கு மன வருத்தத்தை யுண்டாக்கின. அதை சுவாமிஜியும் அறிந்தார். உடனே அவன் மனத்தை வேறு வழியில் திருப்பினார். அவர் மேற்கு முகமாக உள்ள காட்சிகளை அவனுக்குச் சுட்டிக் காட்டினார். அக்காட்சியில் வெகு தூரத்திற்கப்பால் கருநிறத்துடன் அராபிக்கடல் காணப்பட்டது. கடற்கரையின் ஒருபால் சில கப்பல்கள் தங்கிநிற்கும் தோற்றம் சிறியதாகக் காணப்பட்டது. கடற்கரைக்கு இப்பால் வெண் சுண்ணம் பூசப்பெற்ற வெண்மையான கட்டிடங்கள் தோன்றின. சுவாமிஜி இவைகளையெல்லாம் சுட்டிக் காட்டி “அதோ தெரிகிறதே கறுப்பான உருவம் அதுதான் அராபிக்கடல் அதோ அந்த இடத்தில் தோன்றுகிறதே கப்பல்கள்! அவை ஐரோபாதேசத்திலிருந்து வியாபாரப் பொருள்களை எற்றிக் கொண்டு வந்திருக்கின்றன. அதோ காணப்படுகிற வெள்ளைக் கட்டிடங்கள் ஐரோபாவிலிருந்து வந்த போர்த்கேசியர் வசிக்கும் இடம். இதோ இந்தப்புறம் தெரிகிறதே! இந்த மலை இதற்குப் பிரபால்மலை என்று பெயர்.” என்று அவர் அவனுக்கு எல்லாப் பொருள்களையும் சுட்டிக் காட்டி விளக்கிச் சொன்னார். நட்டாஜி சுவாமிஜியுடன் தினந்தோறும் மாலை வேளை

யில் உலாவும்போதெல்லாம் இந்தக் காட்சிகளை யெல்லாம் கண்டு களித்தான்.

நட்டாஜியின் காயங்கள் சில நாட்களுக்குள் ஆறி மறைந்து விட்டன, சுத்தமான மலைக்காற்றைச் சுவாசிப்பதும் கரடு முரடான கற்றரையில் படுத்துறங்குவதும் நட்டாஜியின் தேகத்தை நாளடைவில் உரம்பெறச் செய்தன, மலைப்பாறைகள், மலைச்சரிவுகள், ஓங்கி வளர்ந்த பெரிய மரங்கள் முதலிய காட்சிகள் எல்லாம் ஆண்மைத் தனத்தையும் வீரத்தையும் உண்டாககின. அவனுக்குச் சற்குருவாயமைந்த சன்னியாசியோ உயர்ந்த அறிவும் பரந்த நோக்கமும் உடையவர். பற்பல நாடு நகரங்கள் கோயில் குளங்களை யெல்லாம் சுற்றித் திரிந்து உலக இயல்பை நன்கு உணர்ந்தவர். அவர் திண்ணை வேதாந்தம் பேசும் சில சன்னியாசிகளைப் போன்றவர் அல்லர். பீஜப்பூர் அரசாங்கத்தின் கொடுங்கோலாட்சியில் மகாராட்டிர தேசம் அடைந்துள்ள துன்பங்களை யெல்லாம் நேரில் கண்டு கண்ணீர் விட்டு தேசத்தின் விடுதலைக்காகக் கடவுளை வணங்கித்துதிப்பவர். இத்தகைய தேசாபிமானமும் கடவுள் பத்தியும் வாய்ந்த யோகானந்த சுவாமிகள், தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட நட்டாஜியின் மன இயல்பைக் கூர்ந்து நோக்கி, அவன் வீரத் தனமும் தேசாபிமானமும் ஊக்கமும் விடாமுயற்சியும் உள்ளவன் என்பதை நன்கறிந்து கொண்டார். தத்காலம் தேசம் இருக்கும் நிலையில் வாலிபர்களுக்கு வேதாந்தம் முதலிய ஞானோபதேசங்களைப் போதிப் பதில் பயனில்லை என்பதும் வாலிபர்களுக்குத் தேசாபிமானத்தைப் போதித்துத் தாய் நாட்டின் விடுதலைக்காகவும் ஜனங்களின் நன்மைக்காகவும் உண்மையுடன் உழைக்கச் செய்ய வேண்டு மென்பதும் அவர் கொள்கை. "தற்போதுள்ள அரசியல் நிலைமையில் சிறுவர்களுக்கு ஆன்ம ஞானத்தைப் போதித்து அரசியல் ஞானத்தைச் சூனியமாக்குவது மகாராட்டிர தேசத்தை அடிமைப்படுத்துவதாகும்" என்று அவர் சொல்லுவதுண்டு. ஆகவே இயற்கையிலேயே ஆண்மையும் வீரமும் உள்ள நட்டாஜியைப் போர்களத்தில் வாள்பிடித்துச் சண்டை செய்யும் போர்வீரனாக்க எண்ணினார். நட்டாஜியும் போர்க்கள வித்தைகளைக் கற்றுக்கொள்ள மிகுந்த ஆவலாயிருந்தான். சுவாமிஜி தன் இளமைப்பருவமுதல் சிப்பாய் கூட்டத்தில் சேர்ந்து அனேக போர்க்களங்களில் சண்டை செய்து பேர்பெற்ற வீரனாகவிருந்த

வராதலால் அவர் அந்த வித்தைகளை யெல்லாம் ஒவ்வொன்ருக அவனுக்குக் கற்பித்துக் கொடுத்தார். முதன் முதலில், தோப்புக் கரணம் போடுதல், தண்டால் வாங்குதல், கர்லா சுழற்றல் முதலிய தேகாப்பியாசங்களைக் கற்பித்தார். நட்டாஜி இந்த அப்பியாசங் களை யெல்லாம் தினந்தோறும் காலைமாலை இருவேளையிலும் அப்பி யாசம் செய்து வந்தான். பிறகு ஆயுதவித்தைகளை அவனுக்குக் கற்பித்தார். வில்லை வளைத்து குறிதப்பாமல் அம்பு எய்வதும், எறி ஈட்டியைக் குறிதப்பாமல் எறிவதும், வாள்பிடித்துப் போர்செய்வ தும் இன்னும் இவைபோன்ற பல போர்க்களவித்தைகளை யெல்லாம் நாளடைவில் கற்பித்து வந்தார். கூரறிவுள்ள நட்டாஜி அவர் கற்பிக் கும் வித்தைகள் யாவற்றையும் நன்ருகக் கற்றுவந்தான்; விடாமல் அப்பியசித்தும் வந்தான். சுவாமிஜி தமக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் ஒன்று விடாமல் கற்பித்து வந்தார். இவ்வித்தைகளை யெல்லாம் நட்டாஜி நாளடைவில் கற்றுக் கைதேர்ந்தவீரனுனன். அவன் ஆயுதங்களைத் திறமையுடன் கையாளும் விதத்தைக் கண்ட யோகானந்த சுவாமிகள் மனதில் மகிழ்ச்சி கொண்டார். “இச்சிறு வன் சிறந்த போர்வீரனுக விளங்குவான். என்? சிப்பாய்களை அணிவகுத்தல் முதலியவைகளையும் கற்பித்துக் கொடுத்து விட் டால் சேனைகளுக்குத் தலைவனுகவும் விளங்குவான்” என்று அவர் தமக்குள் சொல்லிக் கொண்டார். பின்னர் யோகானந்த சுவாமி கள், சேனைகளை அணிவகுத்தல், சிப்பாய்கள் சோர்வடையுங் காலத் தில் அவர்களுக்கு உற்சாக மூட்டும் விதம், பகைவர்களைச் சுலபமா கத் தோல்வியடையச் செய்யும் வழிகள் முதலிய போர்க்கள தந்தி ரங்களை யெல்லாம் அவனுக்குப் போதித்தார்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. அறிவில்லாத வெறும் போர்வீரனுக தேகபலம் மிகுந்து அறிவு பலமில்லலாத போர்வீர னுக, அவனைப் பழக்கிவைக்க அவர் விரும்பவில்லை. அவர் அவன் தேக பலத்தை வளரச்செய்தது போலவே அறிவையும் வளரச் செய்து வந்தார். காலையிலும் மாலையிலும் வாள்போர் ஈட்டிப் போர் முதலிய படைக்கலப் பயிற்சியை கற்பித்துவந்ததல்லாமல், பகற்காலத்தில் தேசாபிமானிகள், போர்வீரர்கள் முதலியவர்களின் சரித்திரங்களையும் பீமன் அர்ச்சுனன் முதலிய பாரத வீரர்களின் அருஞ்செயல்களையும் அவர் அவனுக்குப் போதித்து வந்தார். இச் சரித்திரங்களின் மூலமாக வீரம், அஞ்சாமை, தேசாபிமானம், இரக் கம், உண்மை கடைப் பிடித்தல் முதலிய நல்ல குணங்களை யெல்

லாம் அவனுக்குப் போதித்தார். படித்தறிவதைப் பார்க்கிலும் பிறர் சொல்லக் கேட்டறியும் விஷயங்கள் மனதில் ஊன்றிப் பதிந்து விடுவது இயற்கையாதலால், சுவாமிஜிபோதித்த நல்லொழுக்கங்கள் எல்லாம் நட்டாஜியின் மனதில் ஊன்றிப் பதிந்துவிட்டன. சுருங்கச் சொல்லில் ஒரு சுத்தவீரனுக்கு இருக்கவேண்டிய எல்லா நற்குணங்களும் அவனிடம் காணப்பட்டன. இவ்விதம் சுவாமிஜி புலிக்குகையில் யோகத்திலிருக்கும் நேரந்தவிர, மற்ற நேரங்களில் நட்டாஜியின் மனத்தையும் தேகத்தையும் பலப்படுத்தி உரஞ்செய்து வந்தார் ; ஞானப்போர் செய்யும் யோகானந்தர் நட்டாஜிக்கு உலகப் போர்வித்தையைக் கற்பித்து வந்தார்.

மேதார மலையுச்சியில் வசிக்கும் நட்டாஜி இப்போது பழைய நட்டாஜி யல்லன். அவன் இப்போது முன்னைவிட ஆண்மையும் அழகும் தேகபலமும் சுறுசுறுப்புமுள்ளவனாகக் காணப்படுகிறான் அவன் தேக முழுவதும் தசைக் கட்டுகள் அமைந்து உறுதியுடன் காணப்படுகின்றன. அவன் மனத்தில் வீரமும் தேசாபிமானமும் ததும்புகிறது. கூர்ந்த அறிவும் எடுத்தகாரியத்தை இனிது முடிக்கும் ஆற்றலும் உள்ளவன் என்பதை அவன் முகம் இனிது விளக்குகிறது. தன் தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி தன் இரத்தத்தைச் சிந்தவும் சமயம் நேர்ந்தால் தன் உயிரைக் கொடுக்கவும் அவன் ஆயத்தமாயிருக்கிறான். மாலைநேரங்களில் புலிக்குகைக்கருகிலுள்ள பாறைகள்மேல் உட்கார்ந்து இளைப்பாறும் நேரத்தில் அவன் மகாராட்டிர தேசத்தைப்பார்த்துப் பெருமூச்சுவிடுவான். இங்ஙனம் நாட்கள் பல சென்றன. யோகானந்தர் வரவர தள்ளாமையடைந்தார். அவர் தலைமயிரும் தாடியும் வெண்பஞ்சுபோல் நரைத்துவிட்டன. தேகம் தளர்ந்து திரைத்துக் காணப்படுகிறது. ஆனால், யோகாப்பியாசத்தை முன்னைவிட அதிக நேரம் செய்து வருகிறார்.

(இன்னும் வரும்)

சீனாவில் செல்வர்களாக இருந்தால் எவ்வித குற்றங்களையும் செய்யலாம். சட்டத்திற்கு அவன் சிறிதும் அஞ்சவேண்டியதில்லையாம். ஒரு பணக்காரன் எந்தக்குற்றத்தையும் செய்துவிட்டுத் தனக்காக இன்னொருவனுக்குப் பணம் கொடுதது அவனைத் தண்டனை அடையச் செய்யலாமாம். சீனாவில் ஒவ்வொரு நகரத்திலும், குற்றம் செய்தவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு தண்டனை அனுபவிக்கும் ஆட்கள் அநேகர் இருக்கிறார்களாம். அவர்களுக்கு இதேதான் தொழிலாம்.

மேகம்

(ஆசிரியர் மு. மாணிக்க நாயகர் புதுவை)

நேரிசை யாசிரியப்பா.

மாயிரு ஞாலம் மன்னும் பயிர்கண்
ஞாயிறு! தன்னு னலியும் போழ்து
சோக நீங்கிச் சுகம் பெறப் பொழியும்
மேகமே! நின்னுடை மேன்மை போற்றுதும்!
அருங்கவிப்புலவ னுற்றதுலகி
னெருங்குங்காலை நேர்தரு வறுமை
புலமை மன்னிப் புலராவண்ணம்
நிலவி மாய்க்கு நீர்மைத் தன்ன!
வெண்கதிர் வீசி வெளியிருளகற்று
மொண்கதிர் மறைக்கு மோட்ட மென்னே!
ஆழிச் சங்க னமர்திரு மார்ப
னாழிப்பள்ளி யமர்திருமாலுன்
வண்ணம்! பண்பு வளருந் தண்ணளி
நண்ணிக் கொண்டான் நவிலும் புகழோய்!
கண்ணனுலகுக் கைம்மாறின்றி
யெண்ணுமுதவி யியற்றும் பண்பாய்
உலகிற் குறையா வுண்ணீரூட்டி
நிலவுங் கங்குல்! நின்றகை யென்னே.
தென்னன் வளவன் சேரன் மற்றோர்
மன்னன் கவிக்கு மகிழ்நிதியளிக்க
வறுமை புலவனை வாழ்த்தி நீங்கிப்
பிறிதோரிடமே பிறங்கு மன்ன
ஆய்திடுங்காலே வாயு நின்னைப்
பாய்ந்திடி னுருவம் பலவாய்ச் சிதைந்தும்
உலகிருள் விலக்க வோங்கும் பரிதி
நிலவி விளங்க நீங்கும் பண்போய்!
அறவழி காணு மரையனுலகி
லறவழி காணி னன்பாய்ப் புரிக்கும்
அறவழி விட்டுமேல் அகன்றிடின் வையம்
அறவழி நிற்க வனைத்து முயற்சி
நாட்டி மற்றும் நால்வகை யுத்தி

நாட்டிப் படியை நலமுறச் செய்வன்
எழிலெனும் பெயர்க் கிலக்காய் நிலவு
மெழிலி நீமற் றேர் மலி மன்ன
ஞெப்பா யென்னி னுலகம் நடுநிலை
தப்பா தடையுந் தகைமைத் தாகும்
மெய்ம்முதற்குணமே மேவியவையம்
பொய்வழி யகற்றப் பொழிவை மன்னே!
பொய்களவாதிப் புழுங்கி னுலகிற்
பொய்ப்பாய்ச் சின்னாட் புத்தி பெறவே.
இலக்கிய முடனே விலக்கண கரைகண்
டிலங்குக் கவிதான் இயற்றும் பாவுந்
தண்சொற் சுவையுந் தருபொருட் சுவையு
மெண்ணிக ந்தனவா யேற்படுமாபோல்
விண்டரீ தொவவோர் விசைநற்காளக்
கொண்மூ வென்னிற் குடங்கொண் டூற்றும்
வண்மை மிகுத்து வயங்குமுன்றன்
தண்ணிய றன்னைத் தாணி புகழும்!
அரைகுறையாக வறையுங் கல்வி
யுரிமை நண்பர்! உகந்தோர் நற்பா
தீட்ட முடியா தியங்குறு மாபோல்
வாட்ட முற்று வளமை மாறி
யிடை யிடை யோரோர் இயக்க மதனால்
நடைபெறுந் தூரல் ஞாலம் மிசையே
குன்றுகடோறுங் குன்றுகடோறு
நின்று நடனம் நன்று புரிவை!
காலை வெய்யோன் கடுங்கதிர் பரப்பி
வேலை விட்டு வெளிவரும் போழ்து
தன்மேற் போர்வை தடிந்து மிகவே
மின்னு மெழிலான் மிளிர்வன் மாதோ
கிஞ்சுக நடையார் கிளர் நடைபழிக்கும்
மஞ்ஞைக் குழாந்தன் வளர்வா வதனால்
மஞ்சே! நின்றன் மகா தோற்றங்கண்
டெஞ்சா தொளிறு மெண்ணரும் பீலி
விரித்து நடந்தும் விதமுறும் பன்னிறம்
பொருந்தக் காட்டும் புதுமை யென்னே!
வேகம் பெருக வானுறும்
மேக நீ மொழியின் மேன்மை மிகுமே.

சமண பாரதம்

(ஸ்ரீமான் மே. சக்கரவர்த்தி எழுதியது.)

அத்தியாயம் 2.

சமண பாரதம்—திருதராட்டிரனாதியோர் பிறப்பு வரலாறு.

ஆதி தீர்த்தங்கராாகிய ஸ்ரீ விருஷப ஸ்வாமியினால் அருளிச் செய்யப்பட்ட அரச வமிசங்கள் ஐந்து. அவை முறையே இக்ஷ்வாகு வமிசம், குருவமிசம், யதுவமிசம், உக்கிரவமிசம், நாதவமிசம் என்பவையாம். அவற்றில் முதலாவதாகிய குருவமிசத்தில் ஆதியில் சோமப்பிரப மகாராஜன் தோன்றினன். அவனுக்கு ஜயகுமார் முதலாகப் பதினால்வர் குமாரர்கள். அவர்களில் ஜயகுமாரன் பரத சக்கரவர்த்திக்குச் சேனாதிபதியாகி, சுலோசனை யென்னும் நங்கையர் திலகத்தை மணந்து சுகமனுபவித்து ஸ்ரீ விருஷப தீர்த்தங்கரருக்கு எழுபத்தோராங் கணதரராகி சித்தக்ஷேத்திர மடைந்து என்றும் பொன்றாச் சுகத்தை யடைந்தனன். அவனுக்குப் பின் குருகுலத்தில் அநேக அரசர்கள் பிறந்து நற்கதிபெற்றனர். அவ்வமிசத்திலேயே கடவுள் தன்மையை யடைந்த ஸ்ரீ சாந்தி தீர்த்தங்கரர், குந்து தீர்த்தங்கரர் முதலியவர்கள் அவதரித்தார்கள். அவர்களுக்குப் பின்னரும் பல அரசர்கள் தோன்றி அரசு செலுத்தி நற்பதம் பெற்றனர். அத்தகைய பெருமையுள்ள வமிசத்தில் தான் பாண்டவரும் பிறந்தனர். அவர்கள் சரித்திரம் வருமாறு.

பரதகண்டத்திலே குருஜாங்கல தேசத்திலே அஸ்தினாகபுரமென்னும் பட்டண மொன்றுண்டு. அதனை, சாந்தனன் என்னும் மன்னன் அரசிருக்கை நகராகக் கொண்டு அரசு புரிந்து வந்தான். அவனுக்கு மனைவி சுந்தரி யென்பாள். அவர்களுக்குப் புத்திரன் பராசரன். பராசரன் கங்கை யென்பவளை மணந்து காங்கேயன் என்னும் புத்திரனைப் பெற்றனன்.

பராசர மன்னன் அரசாண்டு வருகின்ற காலத்தே ஒருநாள், அவன் கங்கா நதியில் படிந்து நீர்விளையாடச் சென்றனன். ஆங்கே கங்காநதிக்கரையில் அழகே ஓர் உருவெடுத்தாற் போன்றிருந்த வித்தியாதர கன்னிகாரத்தின மொருத்தி யிருந்தனள். அவளைக் கண்டதும் மன்னன் காமபரவசமானான். அவன், அழகிய அம்மாதை மணஞ்செய்து மனைவியாக்கக் கருதி அவளைக் காப்பாற்றும்

வலைஞனை யணுகி தன் விருப்பத்தைத் தெரிவித்தான். வலைஞன், உனக்கு மூத்தமனைவியினிடமாகப் பிறந்த புத்திரன் ஒருவனிருக்கின்றான். அவனுக்கே அரசு உரிமையாகும். என் பெண் வயிற்றுப் பிள்ளைகள் அவ்வுரிமையைப் பெறுமலன்றோ போய் விடும். இத்தகைய இழிவை என் பெண்ணுக்கு நான் தேடி வைத்தல் நன்றன்று' என்றான். அரசன் அம்மொழி கேட்டு மனவருத்தத்துடன் தன் அரண்மனை யடைந்தான். காங்கேயன் தந்தை வருத்தத்தைக் கேட்டுணர்ந்து, தன் கடமை மறவாதவனாய்க் கங்கைக் கரையிலுள்ள வலைஞன் குடிசையைத் தேடிச் சென்றான்.

காங்கேயன் வலைஞனைத் தேடியடைந்து அவனைப் பார்த்து, 'ஐயா, உன்மகள் வயிற்றில் பிறக்கும் புத்திரனுக்கே அரசுரிமையைத் தருகின்றேன். அவ்வம்மையை எனது தந்தைக்கு விவாகஞ் செய்து கொடு' என்று வேண்டிக் கொண்டான். அதற்கு வலைஞன் காங்கேயனை நோக்கி, 'சுவாமி, நீர் அதற்குச் சம்மதித்தாலும் உனக்குப் பிறக்கும் பிள்ளைகள் அதற்குச் சம்மதிப்பார்களா? அவர்கள் வலுவில் சண்டையிட்டல்லவோ அபகரித்துக் கொள்வார்கள்' என்றான். காங்கேயன் தந்தை விருப்ப பரிபாலனாய் வலைஞனைப் பார்த்து, 'ஐயா, நான் பஞ்சபரமேஷ்டிகள் சாக்ஷியாக இனி விவாகமே செய்துகொள்வதில்லை. பிரமசரிய விரதமே என் ஆயுள் உள்ளளவும் அனுஷ்டிப்பேன். இது சத்தியம்' என்றனன். இத்தகைய சத்திய விரதத்தைக் கேட்ட வலைஞனும் மற்றையோரும் பிரமித்து விட்டனர். இவனே தந்தையின் பொருட்டுப் பீஷ்ம விரத மேற்கொண்டவன் என்று கொண்டாடினர். அன்று முதலே அவனுக்குப் பீஷ்மன் என்னும் பெயருண்டாயிற்று.

காங்கேயன் இத்தகைய சத்தியவிரத மேற்கொண்டதும், வலைஞன், யோசனை கந்தியெனும் பரிமளகந்தி யென்றும் சிறப்புப்பெயர் தாங்கி கலைமகளோ இலக்குமியோ வென்று சந்தேகிக்கும்படியான எழில் வாய்ந்த தன்வசமிருந்த கன்னிகையைக் காங்கேயனிடம் ஒப்புவித்து அக்கன்னிகையின் வரலாற்றைக் கூறுவதானான்.

'சத்திய சீல! இப்பொழுது உன்னிடம் ஒப்வித்திருக்கும் கன்னிகை என்வயிற்று மகளல்லள். இவள் ஒரு வித்தியாதர கன்னிகை. விஜயார்த்த மலையின் தென்பாரிசத்தே இரத்தினபுர மென்னும் வித்தியாதர நகர மொன்றுளது. அதனை யாள்வோன் ஜன்னு வென்னும் பெயரினனாகிய வித்தியாதர மன்னன். அவன் தேவி

ஜாண்ணவி யென்பாள். அவர்களுக்குப் புத்திரி சத்தியவதி என்னும் பெயரினள். அவள் நல்ல தேக காந்தியும் சுகந்தமும் பெற்றிருந்ததனுல் அவளை யோசனை கந்தி யென்றும் பரிமள கந்தி யென்றும் சிலர் சிறப்புப் பெயரிட்டழைப்பர். அவள் செல்வமாக வளர்ந்து யௌவனளாகியபின் அவளை எவனுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதென அவளுடைய தந்தை மந்திரிகளுடன் ஆலோசனை செய்தான். மந்திரிகள், 'இவள் அஸ்திநாக புரத்தரசனுகிய பராசரன் என்பவனுக்குப் பாரியையாகுவளென ஒரு முனிவரின் வாக்குளது. அவ்வாக்குப்படியே பராசரமன்னனுக்கு மனைவியாவாள்' என்றனர். அரசன் அதற்கு மேல் நடக்க வேண்டிய வற்றைக் கவனிக்கலானுன்.

இங்ஙனம் பரிமளகந்தி யென்னும் சத்கியவதிக்குக் கணவன் இன்னுன் என ஏற்பட்டபின்னர், அரிஷவேக னென்னும் வித்தியாதரன் ஒருவன் அவள் தேகவனப்பைக் கண்டு மோகித்து அவளை தனக்குக் கொடுக்கும்படி கேட்டனன். அரசன், அவன் நாணம் அச்சமின்றித்தன் பெண்ணைக் கேட்பதற்குக் கோபித்து அவனைக் கடிந்து பேசி அனுப்பி விட்டனன். அவ்விதயாதரன் அப்பெண்ணின் மீது வைத்த மோகத்தால் இராக்காலத்தில் வந்து அவளை வலுவில் தூக்கிக்கொண்டு சென்றுன். செல்லும் பொழுது இராக்காலம் நீங்கிப் பொழுது புலர்ந்தது. பகற்காலத்தில் மேலும் எடுத்துச் செல்வதற்குப் பயந்து அவளை இவ்விடத்தில் என்னுடைய குடிசையில் விட்டு ஜண்ணு மன்னன் மீது சண்டைக்குச் சென்றுன். சென்றவன் ஜண்ணுவோடு யுத்தஞ் செய்ய வாற்றுது முடிவில் மரணமடைந்தான். சத்தியவதியின் பெற்றோர்கள் புத்திரியை எங்குந் தேடிக்காணுது இனிக்கிடைப்பது அரிதெனக் கைவிட்டனர். அதன் பின் சததியவதி என்னிடமே அடைக்கவமானுள். நாள் அவளுடைய அழகின் மிகுதியைக் கண்டு காமபரவசனுகி அவளை அணுவதற்கு நெருங்கினேன். அது பொழுது ஆகாச தலத்தேயிருந்து அசரீரியாக 'இவள் உத்தம குலத்திற் பிறந்த கன்னிகை; இவளை நீ தொடாதே.' என்று ஒருவார்த்தை பிறந்தது. நான் அவ்வார்த்தை கேட்டுப் பயந்து அன்று முதல் இன்று வரை சத்தியவதியை என்மகளேபோல் அன்புடன் காப்பாற்றி வருகின்றேன். அவளே இவள், விதிப்படி எல்லாம் முடிந்தது. சுகமாக இவளை அழைத்துச்சென்று உன் தந்தைக்கு மண

முடித்து, வை' என்று சொல்லி வழி யனுப்பினன், காங்கேயன் சத்தியவதியை யழைத்து வந்துதன் தந்தையிடம் கொண்டு வந்து விட்டனன். பராசரன் தன் புத்திரன் கடமைக்கு மகிழ்ந்து சத்திய வதியைக் கைப்பிடித்து அக்கினி சாக்ஷியாக மணந்து கொண்டனன். அன்று முதல் மன்னன் எழிலின் மிக்காளாகி விளங்கிய சத்தியவதியு டன் என்றும் மாறு லீலாவிநோதங் கொண்டு காலங்கழித்தனன். அக் காலத்தே அத்தம்பதிகளுக்கு வேதவியாசன் என்னும் பெயரினனு கிய ஒரு குமாரன் பிறந்தான். அப்புத்திரன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வித்தியாப்பியாசத் திற்குரிய பருவத்தை யடைந்ததும் நல்லாசிரியர்பால் சேர்ந்து வேதபாரங்கத னுனன். அவன் மேலும் வித்தியாதரியாகிய தன் தாயின் வித்தை களையுங்கற்று அரசகுமாரர்கள் யாவரினும் மேன்மை பெற்று விளங் கினுன். வேதவியாசன் சகலகலைகளையுங்கற்று யௌவனனுனதும் அவனது பெற்றோர்கள், பத்தரைமாற்றுத் தங்கம் போல் மேனியும் நல்ல அங்கவிலக்கணங்களுமமைந்த சுபத்திரை யென்னும் நல் லொழுக்கமுள்ள நங்கையை மணஞ்செய்து வைத்தனர். அவர்கள் கூடி இன்பந்துய்க்கின்ற காலத்தே இரததினத்திரயம் போல மூன்று புத்திரர்கள் பிறந்தனர். அவர்கள் முறையே திருதராட் டிரன், பாண்டு, விதுரன் என்பார். அவர்களில் முதலிருவரும் பராக்கிரமத்தாலும், மற்றையோன் ஞானத்தாலும் நல்லொழுக்கத் தாலும் மேம்பட்டு விளங்கினர். அவர்கள் மூவரும் குமாரகாலத்தை யடைந்ததும், திருதராட்டிரனுக்கு அரசபட்டங் கட்டி, காங் கேயரை மந்திரி பதத்தில் வைத்து, சாந்தனன், பராசரன் வேத வியாசன் முதலியோர் ஜிநதீக்ஷை மேற்கொண்டு தபோவனமடைந் தார்கள். பின்பு திருதராட்டிரன் பாண்டு விதுரன் முதலியோர் நீதியுடன் அரசாக்ஷி செய்து வந்தனர்.

(தொடரும்.)

இங்கிலாந்தில் மனிதர்களையும் குழந்தைகளையும் தபாலில் அனுப்பலாமாம். சமீபத்தில் நாட்டுப்புறத்திலிருந்து ஒரு கனவான் தன் குழந்தையை லண்டனிலுள்ள பாட்டி வீட்டுக்கு அழைத்து வந்தாராம். வழியில், உடனே திரும்பிவரும்படி ஊரிலிருந்து அவசரத் தந்தி வந்தாம். உடனே அவர் அருகிலிருந்த தபாலாபீ ஸில் குழந்தையை ஒப்புவித்து விட்டுத் திரும்பினுராம். தபாலா பீஸ் காரர்கள் குழந்தையை உரிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்களாம்.

ஸ்ரீ ஹர்ஷ சரிதம்

ஸ்ரீமான் ச. செல்லம் எழுதியது.

துன்பத் தொடர்பு (4)

ராஜியவர்த்தனனுக்குத் தக்க பருவம் வந்தபோது பிரபாகர வர்த்தனன் அவ்வரசிளங்குமாரனை வடமேற்கு பாகத்தில் வதியும் ஹூணர்களை கீழடக்குவதற்கு அனுப்பினான். ஹர்ஷனும் தேர், யானை, குதிரை காலாட்களோடு தன் தமயனைத் தொடர்ந்து சென்றான். இருவர் சேனைகளும் இமயமலைச் சாரலில் சென்று சேர்ந்தவுடன் தன் சேனையைத் தனியாகப் பிரித்து வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக ஹர்ஷர் சென்று விட்டார். சிங்கம், கடுவாய் கரடி முதலியவற்றை வேட்டையாடி அங்கே தன் படைகளோடு தாமதித்தார். ஒரு நாள் வேட்டையாடி களைத்து பகல் வேளையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் ஒரு கனாக்கண்டு, உடனே திடுக்கிட்டு விழித்தான். அது ஒரு சிங்கம் காட்டு தீயில் அகப்பட்டு இறந்தது, அதைக்கண்ட பெண் சிங்கமும் உடனே அத்தீயில் பாய்ந்தது. இதைக் கண்டு திடுக்கிட்டு விழிக்கும் போது அவருடைய இடதுகண துடித்தது. இத் துர் நிமித்தத்தால் தனக்கு என்ன தீமை வரப்போகிறதோ வென்று அகங் குழைந்து வாடி யிருந்தான். வேட்டையிலும் விளையாட்டிலும் மனஞ் செல்லாமல் வாளா விருந்தான்.

தனக்கு வரவிருக்கும் தீமைக்காக வருந்திக் கொண்டிருக்கையில் ஹர்ஷனுக்கு அன்று மத்தியானம் தலை நகரில் வாழுகிற குரங்க னெனும் சேவகன் விரைந்தோடி வந்து பருத்த கரிய ஆடையால் மறைக்கப்பட்ட திரு முகத்தைக் கொடுத்தான். அதை ஆவலோடு ஹர்ஷன் வாங்கி தன் தந்தைக்கு சுவரமென்று அறிந்து கொண்டான். அப்பொழுது அன்று காலையில் கண்ட கனவு நனவுக்கு வந்தது. உடனே சேனைகள் நகர் நோக்கி திரும்பின. தண்டி முதலானவர்களும் சூழ்ந்து யானை மீது எறி ஹர்ஷர் நகரம் வந்தார். அவர் வரும் போது தனேசுவரம் இருந்த நிலையை தண்டி மிக வருணித்திருக்கிறார். ஹர்ஷன் வரும்போது தனேசுவரம் ஒரு ஜீவனகற்ற நகரம் போல காணப்பட்டது. எங்கும் துன்

பமே குடிகொண்டிருக்கிறது. இன்பத்தை இறையளவாவது எங்கும் காணமுடியவில்லை. நகரமாந்தர் தங்கள் தங்கள் குலதேவதைகளை மஹாராஜாவின் க்ஷேமத்தின் பொருட்டு வணங்குகிறார்கள். இவைகளை யெல்லாம் கண்டு கொண்டே பொறுக்க முடியாத மனோ வேதனையோடு கொட்டார வாயிலில் நுழைந்தார். அங்கேயிருந்த சுசேஷணனெனும் வைத்தியனிடமிருந்து தந்தையின் வியாதி பலமாக விருக்கிறதென்று அறிந்துகொண்டான். கொட்டாரத்தினுள்ளேயும் அங்குள்ளவர்கள் மன்னவனுடைய க்ஷேமத்திற்காக யாகம் முதலியன நடத்துகிறார்கள். பிரபாகரவர்த்தனர் கிடக்கும் மனை மிக அமைதி நிலவிக்காணப்பட்டது. குறுநில மன்னர், அமைச்சர், புரோகிதர் முதலியவருக்கு அளவிடமுடியாத துன்பமுண்டாகின்றன. பிரபாகரவர்த்தனருடைய படுக்கை பாலழிபோன்று வெண்மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. சிரசையும் மார்பையும் தொட்டுப்பார்த்துக கொண்டும் ஆரியபுத்திரா! ஆரியபுத்திரா! என்று இடை இடையே கூவிக் கொண்டும் தன்கையில் வைத்திருக்கும் சாமரையை நழுவவிட்டுக் கொண்டிருக்கும் யசோமதி தேவி பக்கத்திதிருக்கிறாள். இந்நிலையுள்ள தந்தையின் சமீபத்தில் வருந்திய முகத்தவனாய் ஹர்ஷன் சென்றான். மகனைக் கண்டதும் பிரரபாகர வர்த்தனர் மெய்யுறத்தழுவிக் கொண்டார். அப்பொழுது நல்ல மருந்துகளை ஜாக்கிரதையாகக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. அரமனை வைத்தியரிடம் தந்தையின் சுவரத்தைப் பற்றி விசாரணை செய்தார். ஆயுர்வேதத்தில் மிக கைதேர்ந்த ரஸாயனனெனும் வைத்தியன் மறுநாள் தன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதாகக் கூறினான்.

மறுநாட் காலையில் தன் தமயன் ராஜியவர்த்தனனைக் கூட்டிக் கொண்டு வர ஹர்ஷன் தூதுவரை அனுப்பினான். அரமனையில் யாவரும் துன்ப சாகரத்தில் மூழ்கி துடிதுடிசதனர். உற்ற தூதுவரில் சிலர் உயிர் துறந்தனர். பதிவிரதையாகிய யசோமதி தேவி தன் கணவனுக்கு முன்பாகவே சுமங்கலிவதியாக இவ்வுலக வாழ்வை நீத்துவிடவேண்டுமென்று எண்ணினவளாய் நீராடி களபமணிந்து எல்லாவித ஆபரணங்களையும் அணிந்து கொண்டு தன் நாட்டு மந்திரிகளோடு தன் கடேசி விடையைப்பெற்றுக் கொண்டு சரஸ்வதீ நதிக்கரையில் எரிந்து கொண்டிருந்த தீக்குழியில் உவகை பொங்க நன்னீர் பொய்கையில் நல்லன்னஞ் சார்ந்தாப்போல்

பாய்ந்தான். தன் தாயை தீபாய வேண்டாமென்று சொன்ன ஹர்ஷருடைய முயற்சிகளெல்லாம் வீணாயின. தன் அன்பிற்குரிய மனையாளான யசோமதி தேவியை தனியே விடுதல் தகுதியன்று என்று கருதியவரைப்போல பிரபாகர வர்த்தனரும் யாக்கை நீத்தார். இது எ. டி. 605-வது ஆண்டு.

போர்முனையிலிருந்து களைத்த உடம்புடனே வந்த ராஜியவர்த்தனன் நகரம் வந்தபோது இரு சகோதரர்களும் தந்தையின் மரணத்தைப் பற்றி வருந்திக்கொண்டனர். ராஜியவர்த்தனர் தனேசுவரம் ராஜாவானார். தந்தையினுடையவும் தாயினுடையவும் சாவாலுண்டான துன்பம் தீருவதற்கு முன்பே இன்னொரு இன்னல் வந்துற்றது. மாலவ நாட்டு மன்னன் அவர் மைத்துனராகிய கிரகவர்மனைக் கொன்று தன் தங்கையும் கிருகவருமன் மனைவியுமாகிய ராஜியயை பந்தனத்திலாக்கி கனியா குபிஜத்திலுள்ள காராக் கிரகத்தில் வைத்திருப்பதாய்ச் செய்தி கிடைத்தது. உடனே ராஜியவர்த்தனன் ஹர்ஷவர்த்தனரிடம் நாட்டை விட்டுவிட்டு ஒரு பெரிய படையோடு மாலவநாட்டு மன்னனோடு போர் தொடரச் சென்றான். தன் தங்கைக்கு இன்னல் விளைத்த மாலவ நாட்டு மன்னவனை போரில் வெல்லவேண்டுமென்ற எண்ணம் தனக்கு இருந்தாலும் தன் தமயனுடைய கட்டாயத்தினால்தான் ஹர்ஷன் போகவில்லை. ராஜியவர்த்தனன் மாலவநாட்டு மன்னவனை போரில் வென்றானாயினும் அவன் நண்பனான சாரங்கனெனனும் அரசன் சமாதானஞ் செய்வதென்ற சதியாலோசனையால் ராஜியவர்த்தனனைக் கொன்றான். மாண்டுபோன ராஜிய வர்த்தனர் புத்த மதத்தில் பற்றுள்ளவரும் தம்பியாகிய ஹர்ஷரிடம் பேரன்புடையவரு மாவார்.

ராஜியவர்த்தனனோடு போர் புரியச் சென்றவரில் ஒருவன் ஹர்ஷரிடம் அவர் தமயனிறந்த செய்தியைக் கூறினான். அப்பொழுது அவருக்குண்டான கோபத்திற்கும் ஓரளவில்லை. உடனே அவர் கௌடராஜாவோடு போர் தொடர தந்தையின் தொள்மைச் சேனாதிபதியான சிங்கநாதனோடு யோசனை செய்தான். கந்தகுப்தனெனும் யானைப்படைத் தலைவனோடு சேனைகளை ஒழுங்குபடுத்தக் கட்டளை யிடப்பட்டது. ஒரு சுப முகூர்த்தத்தில் தன் படைகளை கௌடராஜாவோடு போர் தொடரப் போவதாகப் பறையறைவித்து பொருக்குப் புறப்பட்டான்.

ஹர்ஷருடைய போர்வர்ணனைகளை பாணன் மிக வர்ணித்திருக்கிறார். அவற்றால் அக்காலத்திலுள்ள யுத்த முறைகள் புலனாகின்றன. போருக்குப் போகும்போதும் படைகளைப் புறப்படுவதற்கு தயாராகவும் புறப்படவும் திரும்பிப் போகவும் பல வேற்றுமைப்பட்ட வாத்தியங்கள் உபயோகப்படுத்தி வந்தனர். ஒவ்வொரு சேனைகளுக்கும் சிறு பகுதிகளுக்கும் பெரும் பகுதிகளுக்கும் தனித்தனி தலைவருண்டு. யானைகளிலேயே படைப்பொருள்கள் கொண்டு போகப்படும். படைவீரர் தங்கள் மனைவி மக்களையும் கூட்டிக்கொண்டே போர் முனை செல்லுவார்கள். குறுநில மன்னரும் அரசனோடு போர் புரியச் செல்வார்கள்.

இங்ஙனம் பெரும் பகுதிச் சேனைகளோடு சென்ற ஹர்ஷரோடு காமரூபம் (ஆஸாம்) அரசன் நடுவழியிற் கண்டு நட்புரிமை கொண்டான். இது ஹர்ஷருடைய பிற்கால நன்மைக்கு மிக உதவி செய்தது.

ஐந்நூறு மனைவிகளைக்கொண்டிருந்து அவர்கள் அனைவரையும் தமது பதவியுடன் இழந்து இப்பொழுது ஜினேவாவில் ஒய்வு பெற்று வாழும் துருக்கி மாஜி சுல்தான் 6.வது மகமது மன்னர் ஸ்வித்ஸர்லாந்தில் ஒரு வியாபாரியின் மகளான மில்லி ஜூலியத் லெப்பியூன் என்ற 22 வயதுள்ள பிரஞ்சுப் பெண்ணை மணந்து கொள்ளப் போகிறார். "அவர் எனக்குத் தாத்தா என்று சொல்லக் கூடிய அவ்வளவு வயதானவ ராயினும் நாங்கள் சந்தோஷமா யிருப்போம் என்று அவள் சொல்லுகிறாள். கலியாணத்திற்குப் பின் அவர்கள் பாரிசில் வசிப்பார்களாம். ஐந்நூறு மனைவியை வைத்து வாழ்ந்தவர் ஒரு மனைவியைச் சந்தோஷமாக வைத்திருக்க மாட்டாரா?" என்று அவள் சொல்லுகிறாள். சுல்தானது சட்ட பூர்வமான நாலு மனைவியர் மட்டுமே அவருடன் ஜினோவாவுக்கு வந்தார்கள். மற்றவர்களைத் துருக்கியிலேயே விட்டுவிட்டார், நால்வரில் ஒருத்தி பாரிசில் தற்கொலை புரிந்து கொண்டாள். மற்றொருத்தி இத்தலியில் ஒரு ரயில் விபத்தில் உயிர் துறந்தாள். எனவே இப்பொழுது இரண்டு மனைவிகளே இருக்கிறார்கள். இப்பொழுது அவரது பரிவாரங்கள் பதினொரு பேர். அவருக்கு வருஷத்திற்கு 18000 பவுன் துருக்கி அரசாங்கத்தார் கொடுக்கிறார்கள். அதைவிடப் பல மடங்கு அதிகமாக அவருக்கு சொந்தச் சொத்துக்களிலிருந்து வேறு வரும்படி கிடைக்கிறது. அதனால் அவர் மிகவும் சௌக்கியமாக வாழ்கிறாராம்.

கடோரசித்தன் கதை

வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. எழுதியது.

(107-ம் பக்கத் தொடர்ச்சி)

அம் மூச்சு அக்கினி வீசுஞ் சுழற் காற்ருகிக் காலன் அமர்ந் திருந்த விந்தை நாற்காலியில் உள்ள எஃகன்ன கம்பிகள் யாவும் உருகி விழும்படிச் செய்தது. உடனே அச்சுற்று எழுந்தனன் காலன். யமதருமராஜருடைய உருவம் எதிரில் தெரியவில்லை. தான் பழகி யிருந்த அவருடைய குரல் மாத்திரம் பின்வருமாறு கேட்டது. "எனது பிரதிநிதியாகிய நீயா இங்ஙனம் மண்ணுலக வாழ்க்கையில் ஆசைப் பட்டு சாப்பாட்டுராமனுய் மகிழ்கின்ருய்? நன்று, நன்று, நன்று—உனது மதி. விடு, விடு, விடு, இவ்வறி வீனத்தை. உடனே புறப்படு, புறப்படு, புறப்படு, உன்வேலைக்கு. முதலாவது உனக்கு விருந்தளித்து வந்த வீணன் கடோரசித்தனைக் கட்டு, கட்டு, கட்டு; பின்னர், உன் பழைய பாக்கியை எல்லாம் பார், பார், பார், சாவில்லை என்று கூறிக் கடவுளை மறந்து, கொந்தளிக்குங் கடலிற் கூத்தாடும் அம்மூர்க்கர்களைப் பிடி, பிடி, பிடி; பின்னர், குழந்தையைக் கவனியாது விட்ட தாயெனும் பெயருள்ள அம்மதியிலியைப் பிடி, பிடி. பிடி, பின்பு, கோயிலிற் கொள்ளை யிட்ட கள்ளர்களைப் பிடி, பிடி. பிடி, பின்னர், பிறன்மனை விழைந்த அப்பேதையைப் பிடி, பிடி. பிடி, அவர்களுக் கெல்லாம் கடவுளுண்டு, யமதருமனுண்டு, காலனுண்டு எனக் காட்டு, காட்டு, காட்டு. நரகத்திற் குடியேறு வதற்கு நிரம்ப இடம் காலியாயிருக் கின்ற தென்று அவர்களுக்குச் சொல்லு, சொல்லு, சொல்லு"— என இடியன்ன தமது குரலில் உத்தரவிட்டு மறைந்தனர் யமதருமராஜர். மறைந்த மறு நிமிஷமே வெளியிற் போயிருந்த கடோர சித்தன்.—

காலனை வெல்வதற்காகவம் மார்க்கண்டர் கண்ணடைத்து
நீலமார் கண்டர்க்கு நித்தமும் பூஜை நிகழ்த்தி வந்தார்
சாலவே காலனைத் தானே யடக்குங் கடோரசித்தன்
போலவே லோகத்தில் உள்ளவர் யாரே புகலுவீரே! [இனிக்
காலகாலன் னெனுந் தெய்வ மொன்றுண்டென்னுங் காசினியோர்
காலகாலன்தான் கடோரசிததன் னெனக் கண்டுணர்வார்.—

எனத் தானே பாடித் தானே மகிழ்ந்து கலக்க மற்ற சித்தத்தவ ணய் நுழைந்தனன் தனது மாளிகைக்குள். நுழைந்து கூடத்தில் வந்த அந்நிமிஷமே அவன் நெஞ்சைப் பிடித்து இறுக்கினன் அவன் வருகையை எதிர் பார்த்திருந்த காலன். "நீ எப்படி வெளிவந் தாய்?" எனக்குழறினன் கடோரசித்தன். "யமதருமராஜர் இங்கு வந்து நீ யிட்ட தளையினின்றும் என்னை விலக்குவித்தனர். அவ ரது மூச்செனு நெருப்பினுல் உருகி வீழ்ந்தன நீ யிட்ட விலங்குகள். நேரமாயிற்று, புறப்படு, இன்னும் நிரம்ப வேலை யிருக்கின்றது" என்றனன் காலன். "உண்மை. எனக்குக் காலநெருக்கந்தான். ஆயினும், உனக்கு இத்தனை நாள் அன்ன மிட்டு, ஆடையளித்துப் பாலூட்டிப் பழந் தந்தேனே; அதற்குக் கைம்மாறாக, அந்த நட் புக்கு அறிகுறியாக, யான் என் மனைவியிடம் என் மோக்ஷ சம்பந்த மான விஷயம் சில பேச எனக்கு அநுமதி தரவேண்டும்"—எனக் கூறி "எனது கண்மணீ! கற்பக வல்லீ!" எனத் தனது மனைவியை விளித்தான்—கடோரசித்தன். காலனும் "பாபம், தனது ஆத்மா நல்லகதி யடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யட்டும் இவன்" என இரங்கிப் பிடித்த பிடியை விடாது சற்று நிதானித் தான். வந்தனள் கற்பகவல்லி. வந்ததும் அவளைத் தழுவி அவள் காதினில் வெகு ரகசியமாகத் தனது இறுதிநாள் மொழிகளைப் பின் வருமாறு கூறினன். "என் கண்ணே! கற்பகமே! யார் என்னை வெறுத்தாலும், நிந்தித்தாலும் நீ என்னிடத்து என்றும் நிலைத்த பத்தியும் அன்பும் உடையவள். உன் மொழி கடந்து நான் இது வரையும் நடந்ததில்லை. நீ இப்போது யான் சொல்லும் மொழி களை மறவாதே, கடவாதே. கேட்டாயோ! மாதரசீ! வைகுண் டத்தில் பெருமாளுக்கு ஏதோ சந்தேகமாம். அது சம்பந்தமாக என்னை ஏதோ யோசனை கேட்க வேண்டுமாம். அதற்காக, அவர் தமது தூதனை அனுப்பி யிருக்கிறார். கொஞ்ச நேரம் இவ்வுடலை விட்டு நான் போக வேண்டியிருக்கிறது. மாநுடராம் உங்கள் கண்ணுக்கு என் உடம்பு பிணம் போலத் தோன்றினும், புத்தி சாலியாகிய நீ, அவ்வுடலை நன்றாய் அலங்கரித்து அது வாடாவண் ணம் கட்டிலின்மீது அதை வைத்துப் பாதுகாத்திருக்க வேண்டும். நமது நண்பர் காலனர் இப்போது கட்டுண்டில்லை. அவரும் என் னேடு வருகின்றார். அவருக்கும் எனக்கும் வழக்கம் போல உண் பன, தின்பன, பருகுவன யாவையும் சரியான நேரத்தில் என் படுக்கைக்குச் சமீபத்தில் நீ வைத்து வரவேண்டும். தெரிந்ததா?

அன்று கொண்டு வந்தேனே முத்துமாலையும் நவரத்ன வங்கியும் அவைகளை நான் திரும்பி வந்த வுடனே உனக்குக் கொடுப்பேன். தெரியுமா. இப்போது நான் சொல்லிய வண்ணமே நீ செய்வதாக எனக்குச் சத்தியம் பண்ணிக் கொடு" என்றனன். அவளும் அங் ஙனமே செய்வேன் என்று ஆணையிட்டுரைத்தனள். கடோரசித்த னும் அந்த முத்துமாலை மீதிருக்குங் காதல் காரணமாகவேனும் இவள் நமது தேகத்தைப் பத்திரமாய்ப் பார்த்து வருவாள் என்ற திட சித்தத்துடன் உயிரை நீத்தனன். கடோர சித்தனது உயிரை யமலோகத்துக்குக் கொண்டு போகும்படிச் "சங்கிலிக்கறுப்பன்" என்னும் ஒரு தூதனிடம் ஒப்புவித்துக் காலன் சென்றனன். காலன் மறைந்த அக்கணமே கடலிடை ஓவென்றலறுங் கூச்சல் ஒன்று கிளம்பி யடங்கிற்று. நிலமிசை ஓவென் றழுங்குரல் எங்குங் கேட்டது. காலன் தனது கட்டவிழ்ந்து வந்து உயிர்களைக் கவர்ந்து எங்கும் முன்போல உலவுகின்றனன் எனப் பாருளோர் கண்டனர். மூடிய கோயில்களெல்லாம் உடனே திறக்கப்பட்டன. ஜப மென்ன, தப மென்ன, தூப மென்ன, தீப மென்ன, பூஜை என்ன நிவேதனம் என்ன திருவிழா என்ன திருப்பணி என்ன? எங்கும் வேத கோஷந்தான், தேவ ஆராதனை தான். நிற்க.

சங்கிலிக் கறுப்பனுங் கடோரசித்தனும் நரகலோக நோக்கிச் செல்கின்றனர். பாதாளலோக வழியாக இருள் சூழ்ந்த நெறியிற் செல்கின்றனர். அப்போது கடோரசித்தன் சங்கிலிக்கறுப்பனை நோக்கி, "அண்ணே! நீங்கள் கள்வராகிய எங்கள் குலதெய்வ மல்லவா? எனக்கு ஏன் இந்த (அவ மிருத்து) அகால மரணம்? வயது நாற்பது கூட எனக்கு நிறையவில்லையே. என்னை எங் கேயோ பேரிருளில் அழைத்துச் செல்லுகின்றீர்களே?" என மிக விநயமாய்க் கேட்டனன். அதற்குச் சங்கிலிக்கறுப்பனும் "அன் பனே! நீ செய்தது தவறு. உன்னைப் போலும் மனிதர்களுடன் நில்லாமல் கடவுளிடத்தேயே உன் சாமர்த்தியத்தை நீ காட்டப் புகுந்தாய். அங்ஙனம் செய்யாமல், உன்னை விட அறிவிற் குறைந்த வர்களையே நீ மோசஞ் செய்து வந்திருப்பாயானல்—உன்னினுங் கரிய கள்ளன் இருக்கின்ருனே "காகம்" எனப் பேர் படைத்து ஆயிரம் வருடம் அகவை கொண்டவன்—அவனிலும் அதிக வாழ் நாள் உனக்குக் கிடைத்திருக்கும். செங்கோலுக்கு முன் சங்கீதமா?

செங்கண்மால் முன் உன் ஜெபம் பலிக்குமா? அவர் கோயிலிற் கொள்ளையிட்டாய். அவர் உன் உயிரைக் கொள்ளை கொண்டார்.'' எனப் பதில் இறுத்தனன். கடோர சித்தனும் "உண்மை தான். என்னை மாத்திரம் இப்போது விட்டு விடுங்கள்; எங்கள் திருமாலுக்குப் பூலோகத்தில் நான் ஓர் உண்மை அடிமையாய் உழைத்து அவர் பொருளைக் கொள்ளை யடிப்பவர்களை நானே ஒறுக்கிப் புடைத்து அவர் ஆலயங்கள் முதலியவற்றைப் புதுப்பித்து அலங்கரித்துக் கோயில் அர்ச்சகர் முதலாயினோர் தமது வேலைகளைச் சரிவர நடத்தி வரும்படிச் செய்கின்றேன் பாருங்கள்; எனக்காகச் சொல்லுகின்றேன் என நினையாதீர்கள்; பெருமாளுடைய பெருமையைக் காப்பாற்ற வேணடித்தான் சொல்லுகின்றேன். கள்ளனைத் தொண்டனுக்கிய மாயன் பெருமாள்; கடோர சித்தனைக் கனிந்த சித்தனுக்கிய கண்ணன் பெருமாள் என யாவரும் அவர் பெருமையைப் பாராட்டுவார்கள். இந்த யோசனைக்கு என்ன சொல்லுகின்றீர்கள்.'' என வினவினன். அதற்குச் சங்கிலிக் கறுப்பன் "நீ சொல்வது உண்மையே. ஆனுல், அநேக உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டு அவை தம்மால் வரும் பயனை அடைவதன் முன் கண்டு பிடிப்பவர் காலஞ் செல்கின்றனரல்லவா? அது போலவே, நீ கண்டு பிடித்த இந்த உண்மையின் பயனை நீ அடைவதற்கில்லை. இந்த யோசனை நீ யிறப்பதன் முன் உனக்கு இருந்திருத்தல் வேண்டும் இப்போது இந்த யோசனையைப் பெருமாளிடஞ் சொல்ல முடியுமா? முடியாது; முடியாது; என்றனன் சங்கிலிக் கறுப்பன். என்? நீங்கள் எனக்காகப் பரிந்து பேசினுல் எம்பெருமான் இரங்க மாட்டாரா? அவர் தான் கருணுகர மூர்த்தி, பக்தவத்சலராயிற்றே. செய்தது தவறு, பொறுத்தருளல் வேண்டும் என வணங்கினுல் உடனே இரங்கி அருள் சுரக்கும் அண்ணலாயிற்றே எங்கள் லக்ஷ்மீ பதி.'' என்றனன் கடோரசித்தன். அதற்குச் சங்கிலிக்கறுப்பன் "ஆமாம். உன் உயிர் உடலிடை இருந்து நீ அங்ஙனம் வணங்கினுல் அவர் உதவுவார். உடலினின்றும் உயிர் கழன்ற பிறகு பேசுவது வீண் வார்த்தை'' என்றனன். "ஓஹோ! நான் என் உடலிடைப் புகுந்து பூவுலகிலிருந்து வேண்டினுல் தாங்கள் எனக்காகப் பெருமாளிடம் பரிந்து பேசி வரம் வாங்கித் தருவீர்கள் போலும். அப்படித்தானு?'' என உசாவினன் கடோரசித்தன். "தடையின்றி அவருங் கேட்டவரங் கொடுப்பார்'' என்றனன் சங்கிலிக் கறுப்பன்.

(இன்னும் வரும்)

சென்னை-600
210372

இயற்பகை நாயனார் மனைவியார்

பண்டிதை அசலாம்பிகை அம்மாள் எழுதியது.

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.

இரண்டாவதாக இவ்வம்மையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

இன்னாயனார் சிவனடியாராக எவர் வரினும் எதை வேண்டினும் தன்பாலுள்ளதாயின் மறாது அளித்தலே தன் பிறழாக் கொள்கையாகக் கடைப் பிடித்தொழுகி வந்தார். இவ்விரதம் காப்பதில் இவர் கொண்டிருந்த உறுதியினை ஈசனும் கண்டு வியந்தே இவர் உள்ளத்தின் நிலையினை யுலகினருக்குணர்த்தவெண்ணி ஓர் சைவ நலங்கனிந்த வேதியராக இவர்பால் நண்ணி (எவரும் நெஞ்சுற நினையத் துணியாதவாறு) இவர் மனைவியாரை அளிக்கவேண்டினர். நாயனார் இதனைக் கேட்டதும் தன்பாலில்லாத ஒன்றைக் கேளாமல் உரித்தாயிருக்கும் பொருளையே கேட்டனரன்றேயென உவகை பொங்கி அவ்வாறு அவர் கேட்டது தான் பெற்ற பெரும்பேறெனக் கூறி அவரை வணங்கி கற்பருங்கலமாகிய தன் மனைவியாரிடம் சென்று "விதிமணக்குலமடந்தையே" என விளித்து இன்றுனை ஒரு சிவனடியாராகிய வேதியருக்குக் கொடுத்தேன் என அஞ்சாது புகன்றனர். இச்சொற் கேட்டதும் மனைவியார் துண்ணென மனங்கலங்கி அறிவழிந்து சிறிது போதிற் றெளிந்தவராய் என்னுயிர்க்கொரு நாயகராய தாமே இன்று என்னைப்பணித்ததிதுவாகில் உமது உரைவழியான் நடப்பதல்லது எனக்கென ஓர் உரிமையுண்டோ? எனக்கூறி வணங்கினர், என்பது பெரிய புராணத்தில்

> "மதுமலர்க் குழல்மனைவியார் கலங்கி
> மனந்தெளிந்த பின் மற்றிது மொழிவார்"
> "இன்று நீரெனக்கருள் செய்ததிதுவேல்
> என்னுயிர்க்கொரு நாதர் நீருரைத்த
> தொன்றைநான் செயுமத்தனையல்லா
> லுரிமை வேறுளதோ வெனக்கென்று
> தன்றனிப் பெருங் கணவரை வணங்கத்
> தாழ்ந்து தொண்டனார் தாமெதிர்வணங்க"

என வரும் செய்யுட்களால் இனிது புலனாகின்றது.

இவர் தனக்கென வுரிமையாகவுள்ள எல்லாப் பொருள்களையும் நம்பனடியவர்க்கே யுரியவைகளெனக் கருதி அவ்வெண்ணமே முதிர்ந்து தழும்பேறிய உள்ளத்தினராக மாறுதல் அடைந்திருந்தமையால் மனித வியற்கைக்குரிய எண்ணங்கள் இவர் உள்ளத்தில் கால் கொள்ள இடம்பெறுமல் கழன்றெழிந்தன. இதுகொண்டே இவரை (உலகியலுக்குப் பகை பூண்டவர்.) இயற்பகையாரென திருத்தொண்டத் தொகையிலும் குறித்ததன்றி வேறில்லை. இத்துணை யுறுதியுடையராக இந்நாயனுர் இருப்பினும் இவர் எண்ணியபடி செய்ய இவர் வாழ்க்கைத் துணைவியார் உடன் படாதொழிி இவர் யாது செய்ய முடியும். வெறுக்கலாம் அன்றி ஒறுக்கலாம். இவர் விரதம் காப்பதற்கியலுமோ ?

இவரிடத்து மனைவியார்க்கு அன்போ மதிப்போ குறைந்த காரணத்தினுல் இக்கட்டளைக்குடன் பட்டதாக ஊகிக்கமுடியாது. நாயனுருக்கும் மனைவியாரிடம் வெறுப்போ, ஐயுறவோ, எற்பட்டு இவ்விதமாகக் கைவிட எண்ணினுர் என்பதுமில்லை. இருவர்க்குள்ளும் ஒதத அன்பும் வேரூன்றியிருந்தது என்பதற்கு மறையவர் கேட்டவுடனே தனது உரிமைப்பொருளென இவர் எண்ணியபடியே, மனைவியார் மனந்தெளிந்து “ தமது சொற்படி நடப்பதொன்றே எனக்குரிய அறமாகு மல்லது எனக்கென ஓர் உரிமை வேறுக உளதோ எனக் கூறியதும் போதிய சான்றுகளாகும் “ விதிப்படி மணக்கப் பெற்ற குலமகளே ” என நாயனுர் விளித்தமையும், என்னுயிர்க் கொரு நாதர் நீர் என அம்மையார் கூறிய மொழியும் இவ்விருவருக்கு முள்ள கரைகடந்த மதிப்பினைக்காட்டத் தக்க உதாரணங்களாகும். இத்தகைய தம்பதிகளிடத்து உலகோர் கொள்ளத்தகாத செய்கைக்கிடம் எற்பட்டதுவே இச்சரிதத்தில் பெரு வியப்பு. அதுபற்றி எல்லாம் வல்ல இறைவனே “செய்ற்கருஞ் செய்கை செய்த தீரனே ” ஓலம் என அழைத்தருளினுர் போலும் இனி அம்மையாரின் உள்ளம் உலகிய லொழுக்கத்திற்றோய்ந்திருந்தது இது தகும் இது தகாதது எனும் பாகுபாட்டுணர்ச்சி வழுவாதிருந்தனர். ஆதலினுலேயே நாயகர் சொல்லிய மாற்றம் கேட்டதும் மனங்கலங்கி யறிவழிந்து பின்னர் கடமையெண்ணித் தெளிந்து நாயகர் கருத்திற்கு எல்லா வகையிலும் துணையாக நின்று அவர் சொற்படி நடப்பதே தனது தருமம் என்கிற தீர்மானத்தைக் கொண்டு எனக்கெனவுரிமை வேறுளதோ ? என்று கூறி வணங்கி

ஞரெனில் நாயனூர் உடன் பட்டதிலும் நாயகியார் உடன்பட்டதே சிறப்புடைய தென்பது தேற்றம். நாயனூர் உலகியலை மறந்திருந்தவர். நாயகியார் நினைந்திருந்தவர். அரிய சிறப்பு மனைவியார்க்கே யாதலினுல் சோதிக்கவந்த ஈசனும் மறையவருருவ மறைந்து மங்கை பங்கனுகக் காட்சி யளித்த போது "நணணிய மனைவியோடு நம்மு டன் போதுகென்று அருள் செய்தனர் போலும்

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை எனும் மூதாட்டியார் அருமைத் திருவாக்கிற் கிலக்கியம் இவ்வம்மையேயாவர் இனி இவ்வம்மையார் தனக்குரிமையின்மையால் தவருன செய்கைக்கி ணங்கியது தகுமோ எனவும் வினவலாம் அவ்விடயமே வேறு தனிதத ஓர் பெருங்கட்டுரையாக விரியும் ஆகவே அதைப்பற்றி இவ்வாராய்ச்சியில் விவகரிப்பதும் கடனன்று. நாயகன் எவ்வழி யிலும் நாயகியின் முழு ஒற்றுமையைப் பெற்றிருந்தாலன்றி தனது கொள்கையில் வெற்றி பெற முடியாதென்பதும், அத்தகைய மனை வியைப்பெற்றவர்க்கே இல்லறமல்லது நல்லறமன்று என்ற மொழி எற்புடையதாகு மென்பதும், "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பதின் நுட்ப மான கருத்திற்கு இவ்வம்மையாரின் தீர்மானம் அரண் செய்வதாகு மென்பதும், நாயகனைத் தவிர வேறு ஆடவரை மனதாலும் நாடாத பல பெண்மணிகள் உண்டாயினும் அவர்கள் சொல்வழி இவர்கள் நடப்பதென்பதிலாமல் தங்கள் சொற்படி அவர்களை நடக்கச் செய்தே வெற்றி பெறுகின்றனராத லின் இவர்களெல்லாம் கற்புடைமடவராகாரென்பதும் [இதனுற் பெறப்படும் உண்மைகளாகும்.

அம்மையார்க்கு கற்பினை நிலைநாட்ட உதாரணமாக நிகழ்ந்த விஷயத்தினை விடுத்து அவர் எண்ணததில் ஊடுருவி நின்ற கருத் தினையே நாம் கருதிப்போற்ற வேண்டியது முதற் கடனுகும்.

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் விரைவில் ஒரு குடும்மத்திற்கு இரண்டு மோட்டார் வீதம் பெருகி விடுமென்று சொல்லுகிறுர்கள். இப்பொழுது மோட்டார் வண்டிகள் உள்ள ஒன்றரைக்கோடி குடும் பங்களில் இரண்டுகோடியே எழுபது லட்சம் மோட்டார் வண்டிகள் இருக்கின்றனவாம்.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் எ. ரோக்கலிக்கம்பிள்ளை எழுதியது)

III

மதுசாரம் சூக்குமரந்திரத்திற்கு ஆகாரமாகாது.

"மதுசாரம் சிறிது காலத்திற்கு முன்னிருந்து தான் அதனியற்கைக் குணத்தால் மருந்து சரக்காகுமே யன்றி, ஆகாரமாகாதென நாம் மதிக்கத்தொடங்கினேம்."—ஸர்ஸ் பென்ஸர்வெல்ஸ், Bart M. D., F. R. S.

"It is only lately we have begun to regard alcohol in its true light, as a drug and not as a food."—The late Sir Spencer Wells, Bar., M. D., F. R. S.

ஆகாரம்.

சூக்கு மரந்திரங்களுக்கு ஆகாரம் வேண்டுமென நாம் முன்னமே தெரிந்திருக்கிறோம். அதேன்? அவற்றின் சீவதாது (protoplasm) எப்போதுந் தேய்வடைகின்றது. அநேக சூக்குமரந்திரங்கள் செத்துப்போகின்றன. அவற்றிற்காகப் புதிய சூக்குமரந்திரங்கள் மீண்டும் நிரம்ப வேண்டும் (சூக்குமரந்திரங்கள் எப்படிப் பிரிந்து புதிய சூக்குமரந்திரங்களுண் டாகின்றனவென்பது உங்களுக்குத் தெரியும்). சூக்குமரந்திரங்களை வளர்க்கவும் அவற்றைப் புதுப்பிக்கவும் புதிய சீவதாது வேண்டுமாதலால், அச்சீவதாது, நாம் உண்ணும் ஆகாரத்திலுள்ள பொருள்களி லிருந்தே உண்டாகின்றது. ஆகவே, சூக்குமரந்திரங்கள் தங்களுக்கு வேண்டிய உஷ்ணம், சக்தி (power to work) இவற்றை ஆகாரத்தினின்றும் உயிர்வாயுவினின்றும் பெறுகின்றன. ஒரு யந்திரம் (Engine), எரிகிற விறகிலிருந்து இயங்குஞ் சக்தியை எப்படிப் பெறுகிறதோ அதுபோலவே, தசையின் சூக்குமரந்திரங்கள் வேலை செய்யவும் தசையை வளர்க்கவும், எலும்பின் சூக்குமரந்திரங்கள் எலும்பை வளர்க்கவும், இன்னும் மற்றச் சூக்குமரந்திரங்கள் ஒவ்வொன்றும் அதனதனுக்குரிய வேலையைச் செய்வதற்கு வேண்டிய சக்தியையும் ஆகாரத்தி லிருந்தே பெறவேண்டும்.

ஆகாரமாவதென்ன ?

எந்தப் பொருள் இரத்தத்திற் கலந்தபோது, (1) தேகவளர்ச்சிக்கு வேண்டும் பொருளைச் சேகரித்து உதவுகிறதோ, (2) தேகத்திலுண்டாகுந் தேய்வைப் புதுப்பிக்கிறதோ, (3) தேகத்தின் எந்தப் பகுதிக்கும் கெடுதலை யுண்டாக்கா திருக்கிறதோ, (4) வேலை செய்வதற்கு ஊக்கத்தை இழக்கச் செய்யா திருக்கிறதோ, (5) தேகத்திற்கு உஷ்ணம், சக்தி இவற்றைக் கொடுக்கிறதோ அதுவே ஆகாரமாகும்.

நாம் உண்ணும் ஆகாரம் தேகத்திற்கு உபயோக மாவதற்குத் தேக அனலால் தகன மாதல் வேண்டும், அதாவது, தேகத்துள் சூக்குமதேயுவோடு கலத்தல் வேண்டும்: (Oxidised, that is, burnt). மதுசாரம் சிறிதளவாயிருப்பினும், அது, தேகத்துள் சூக்குமதேயுவோடு கலந்து தகனமாகிச் சிறிது சக்தியைக் கொடுப்பதால் அதுவும் ஆகாரமாகு மென்று கருதப்படுகிறது. ஆனல், மேலே சொல்லிய நம்முடைய ஆகார லக்ஷணத்தின் மூன்ருவது பாகத்தை முக்கியமாய்க் கவனியுங்கள். அதாவது, ஆகாரமானது, தேகத்தின் எந்தப் பகுதிக்குங் கெடுதலுண்டாக்காதிருத்தல் வேண்டுமென்பதாம். அவ்வாறின்றி, மதுசாரம் கெடுதியை யுண்டாக்குகிறதென்று கீழ்வருவனவற்ருல் நாம் தெரிந்து கொள்வோம்.

சிறிதளவு அபின் பெலடோனு (belladonna) அபின் சாரம் (morphia), பிரகாசிதம் (phosphorous) முதலிய விஷங்கள் தேக அனலால் தகிக்கப்படுகின்றன. எனெனின், தோட்டக்காரன் ஒருவன் தோட்டத்திற் சேர்ந்த குப்பைகள் தனக்குப் பயனில்லையென்று நினைத்து, அவற்றைத் தொலைப்பதற்கு எப்படி எரித்து விடுகிருனே அதுபோலும், தேகமானது, அவ்விஷங்கள் தனக்கு ஆகாதென்று தொலைப்பதற்கு அவற்றைத் தகிக்கின்றது. அவ்வாறு, அவை தேகத்தில் தகித்துச் சிறிது சக்தியைக் கொடுத்தாலும், அவை, ஆகாரமாகு மென்று ஒருவரும் சொல்வாரில்லை. ஆகவே, மதுசாரமும் அவ்விஷங்களி லொன்ருக விருந்து இவ்விதமாக வேலை செய்கிறது.

மதுசாரத்தைப் பற்றி நம்மை நாமே இரண்டு மூன்று கேள்விகளைக் கேட்டுக் கொள்வோம்.

(1) மதுசாரம் தேகத்தை வளர்க்கவும் புதுப்பிக்கவுங் கூடுமா? அதாவது, நாம் நினைப்பதாலும் அல்லது வேலை செய்வ

தாலும் அல்லது விளையாடுவதாலும் எப்போதுந் தேகத்தில் நடந்து கொண்டிருக்குந் தேய்வுக்குறைவை நிரப்பக் கூடுமா?

அது கூடாது. எனெனின், தேய்வுக்குறைவை நிரப்புவதற்குத் தசைகள், மூளை, நரம்புகளிவற்றின் வளர்ச்சிக்கு உபயோகமாகும் பால், ரொட்டி, இறைச்சிகள், முட்டைகள், இன்னும் மற்ற ஆகாராதிகளில் காணப்பட்ட இலவணவாயு (நைட்ரொஜன்-Nitrogen) வேண்டும். அவ்வாயு மதுசாரத்திலில்லை. ஆகையால், அது, தேகத்தை வளர்கக் கூடிய ஆகாரமாகாது.

(2) மதுசாரம், தேகத்தைப் பலப்படுத்தி அதனைத் தகுதியாக வைக்கக் கூடுமா? அது முடியாது. அது பலவீனப் படுத்துகிறது. ஒருவன் அதனை அதிகமாகக் குடித்தால் அவன் பலத்தைக் குறைக்கிறது. ஒரு குடியன் பலவீனனேயாவன். அவனை யப்படியாக்குவது அவன் குடிக்கும் மதுசாரமேயாம்.

மதுசாரக் குடியின்மேல் ஒருவன் அதிக வேலை செய்ய முடியாது. அவன் செய்து முடிக்கும் வேலையின் அளவும் அவ்வேலையின் சீரும் அவன் குடிக்கிற வெறியுள்ள மதுபானத்தினளவால் குறைகின்றது. ஆகையால், கஷ்டமான வேலைகளைக் குறித்த நேரத்திற்குள் அதிக மாகச் செய்யவேண்டியவர்கள் மதுபானத்தை யொழிக்க வேண்டுமென்பதை அனுபவத்தி லறிவார்கள்.

ஒரே விதமான இரண்டு வேலைகளுக்குக் குடியராயில்லாத ஒரு கூட்டத்தாரையும், குடியராயுள்ள யுள்ள அதே தொகையுள்ள இன்னொரு கூட்டத்தாரையும் சமமான ஏற்பாட்டின் மேல் வேலைக்கு விட்டால், குடியராயில்லாத கூட்டத்தாரே அவ்வேலையில் அதிக ஊதியம் பெறுகிறார்கள்.

மதுபான மில்லாதவர்கள் நல்ல வேலைக் காரர்கள்.

மான் மௌத்மாகாணத் (Monnouth Shirc) தில் ஒரு நிலக்கரி சுரங்கத்தில் அக்கவுண்டண்ட் (accountant) ஒருவர் "நான் சோதனை செய்தறியும் அவாவினால் நிலக்கரி சுரங்கத்தில் குழி தோண்டும் மதுபான மில்லாத 48 வேலைக்காரர்களின் சம்பாதனையையும், அதேயிடத்தில் அதே வேலை செய்யும் மதுபானமுள்ள 48 பேர்களின் சம்பாதனையையும் 3 மாதத்திற்கு வெவ்வேறாகக் கணக்கெடுத்தேன். அவற்றின் விவரமாவன:—

	மதுபான மில்லா தவர்கள்.			மதுபான முள்ள வர்கள்.		
	பவுன்.	ஷி.	பெ.	பவுன்.	ஷி.	பெ.
12 ஆட்கள் நம். 1 குழியில்	936	9	0	689	12	0
,, ,, ,, 2 ,,	1532	0	1	788	6	8
,, ,, ,, 3 ,,	1264	3	0	1076	14	0
,, ,, ,, 4 ,,	984	6	0	825	13	6
	4716	18	1	3380	6	2

மேற்கண்ட தொகைகள், மதுபான மில்லாத 48 ஆட்கள் 13 வாரங்களில் மதுபானமுள்ள அதே தொகையினர்களினும் அதிகம் சம்பாதித்திருக்கிறார்க ளென்பதைக்காட்டுகின்றது. மேற்கண்ட ஆட்கள் ஒருவருக் கொருவர் போட்டியால் வேலை செய்து சம்பாதித்த சம்பாதனை யல்லவாதலால் மேற் கண்ட தொகை கிரமமானதாகுமென நம்பலாம்'' என்று கூறுகின் றார்.

(3) **மதுசாரம், தேகத்திற்கு உஷ்ணங் கொடுக்கக் கூடுமா? அது, வேலை செய்வதற்கும் விளையாடுவதற்கும் அவசியமான சக் தியைச் சேகரித்து உதவுமா?** நாம் வாழ்க்கையின்பம் அனுபவிக்க வும், ஊக்கத்தோடு வேலை செய்து சம்பாதிக்கவும், பொது சனங்க ளுடைய நன்மைக்காக நம்முடைய கடமையைச் செய்யவும் நமக்குச் சக்தியைக் கொடுக்குமா?

தேகத்தின் மேற்சருமத்திலும் அதன் உட்புறத்திலும் உஷ்ண மிருக்கிறதை ஞாபகத்தில் வைப்பது அவசியமாகும். தேகத்தின் மேற் சருமத்திலுள்ள உஷ்ணம் எப்போதும் மாறிக்கொண்டே யிரு க்கிறது. தேகம் சௌக்கியமாயிருக்கும் போது உட்புறத்திலுள்ள உஷ்ணம் மாறாமல் எப்போதும் ஒரே தன்மையாயிருக்கிறது. உன் னுடைய கைகளும், பாதங்களும், முகமும் சில சமயம் உஷ்ணமாக வும் சில சமயம் குளிர்ச்சியாகவு மிருக்கிறதை நீ அனுபவத்தில் அறிந் திருப்பாய், உடம்பின்மேற் சருமத்திற்கு உட்புறத்தில் ஆச்சரியப்ப டத்தக்க வலை பின்னியது போன்ற இரத்தக்குழல்கள் அல்லது நாடி களிருக்கின்றன. அவற்றின் மூலமாகவே தேகத்தினுள்ளிருந்து உஷ்ணமான இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்றது. நமது தேகத்

தின் சருமத்தில் குளிர்ச்சியைப் பரிசிக்கிற போது, அங்கே இரத்த வோட்டமில்லாமல் இரத்தக்குழல்கள் சுருங்குகின்றன (Contract Draw in) இவ்வாறுவது, இரத்தத்திலுள்ள உஷ்ணம் போராத படி தடுக்கும் பிரகிருதியின் நியமமாகும் (Nature's Law). நாம் ஓடும்போது இரத்தக்குழல்கள் அல்லது நாடிகள் விரிகின்றன. (dilate). அதனால், உடம்பின் மயிர்த் துவாரங்கள் மூலமாய் உஷ்ணங்கழிந்து போகிறது. அவ்வாறு கழிவதால் தேகங்குளிர்ச்சியடைகின்றது. குளிர்காலத்தில் ஆபத்துக்கிடமாக இரத்தத்தின் உஷ்ணம் அதிகமாகக்குறைகிற போது இரத்தக்குழல்கள் அல்லது நாடிகள் சுருங்கி மயிர்த்துவாரங்கள் மூடிக்கொள்ளுகின்றன. மதுசாரம் உட்கொண்டால் அம்மதுசாரம் இரத்தக்குழல்களை விரியச் செய்து, தேகத்தினுள்ளிருந்து உஷ்ணமான இரத்தத்தைச் சருமத்திற்குப்பாய்ச்சுகிறது. அவ்வாறு பாய்ச்சுவதால் மயிர்த துவாரங்கள் திறந்து, இரத்தத்திலுள்ள உஷ்ணம் நஷ்டமாகிறது. ஒரு கிளாஸ் போர்ட் ஒயின் குடிப்பதில், அதனில் மதுசாரஞ் சிறிதளவே சேர்ந்திருப்பதானாலும் அதுவே தேக உஷ்ணததைச் சிறிது குறைக்கிறது. அவ்வொயினை அதிக அளவாகக் குடிப்பதால் தேக உஷ்ணம் பெரிதுங் குறைகிறது. உண்மையில், மனிதர்கள் மதுசாரங் குடித்திருக்கும்போது அவர்கள் தேக உஷ்ணம் மிகவும் குறைந்திருக்கிறதாக டாக்டர்கள் பரிசோதித்துப் பதிவு செய்திருககின்றனர்.

காப்டன் வெப் (Capt. Webb) என்பவர் இங்கிலீஷ் கால்வாயை (English Channel) நீந்திக்கடக்க இரண்டாந்தரம் முயன்ற போது, தமக்குப் பிராந்தி (brandy) வேண்டாமென மறுத்து விட்டார். ஏனெனின், அது, தம்மை மிக்க பலவீனமாகவும் தேகத்தைக் குளிரச் செய்து ஊக்கமில்லாமலுஞ் செய்ததாகச் சொன்னார். ஆகவே, ஒரு குடியன் துர்பலனும் குளிர்ந்த உடம்பினனுமாவன். இவ் விதமாகப் பலமில்லாமலும் உஷ்ணமில்லாமலுஞ் செய்வது மதுசாரமேயாம்.

மதுசாரக்குடியர், பீர், ஒயின், சாராயங்குடித்த பிறகு, உடம்பு உஷ்ணமாயிருக்கிறதை யுணர்வதினலே மதுசாரந்தான் உஷ்ணப் படுத்துகிறதென்று எண்ணுகிறார்கள். ஏனெனில், மதுசாரம் இரத்த நாடிகளில் உஷ்ணமான இரததத்தை மிகவும் நிரம்பச்செய்து சருமத்திற் பெருக்கி உஷ்ணந் தருகிறது. அவ்வுஷ்ணமான இரத்தவோட்டத்தின் உணர்ச்சியைத்தான் அவர்கள், உஷ்ணப்படுத்து

கிறதென்று நினைக்கிறது. ஆனால். அவ்வுஷ்ணம் சீக்கிரத்தில் குறைந்து போகிறது. அக்குறைவை உஷ்ணமான (Thermameter) யென்னுங்கருவியை நாவின் கீழ் வைத்தெடுத்துப் பார்த்தால் அது, உஷ்ணங்குறைந்து தேகங் குளிர்ந்திருப்பதைக்காட்டும். அவ்வுஷ்ண உணர்ச்சி ஆபத்திற்கிடமாகும். ஏனெனின், அவ்வுஷ்ணம் குளிர்ச்சியின் உணர்ச்சியைத்தரு மியல்புடையது. அதனைக்குடியர்கள் அறிந்து கொள்ளாமல் அசட்டையாயிருக்கிறார்கள்.

தேகம் ஏன் குளிர்ந்து போகிற தென்னும் மற்றக் காரணங்களை, நாம், பின்வரும் அத்தியாயத்தில் தெரிந்து கொள்ளலாம்.

(1) தேகத்திற்கு உஷ்ணத்தையும் சக்தியையுங் கொடுப்பதற்கு உயிர்வாயுவே (Oxygen) காரணமாகிறது. மதுசாரம் அவ்வுயிர் வாயுவைக்குறைக்கிறது. உயிர்வாயுவைக் குறைக்கிறதென்றால் உஷ்ணத்தைக் குறைக்கிறதென்பது பொருள்.

(2) மதுசாரம், தேகத்திலிருந்து கழியவேண்டிய அசுத்தப் பொருளைக் கழிக்கிறதில்லை யாதலால், தேகத்தில் தகனம் (Oxidation) குறைகிறது. ஆகவே, தேகத்தில் குறைந்த அனல் உண்டாகின்றது.

ஆனால், சிலர் "மதுசாரத்தில் கரியும் கரி சேர்ந்த ஆகாரங்களும் (Carbon and Carbonacious foods) சேர்ந்திருப்பதால் அவை உஷ்ணத்தைக் கொடுக்கின்றன" என்று சொல்லுகிறார்கள். அது மெய்தான். ஆனால், கரி (Carbon) சேர்ந்திருக்கிற ஒவ்வொரு பொருளும் உஷ்ணத்தைக் கொடுக்கிற ஆகாரமாகாது. மரக்கட்டை, வைக்கோல், கரியமிலம் (Carbonic acid), இன்னும் மற்ற மரணஏதுவான விஷங்களிவைகளில் கரியடங்கியிருக்கின்றன வாகையால் அவற்றை ஆகாரமாக்கிக்கொள்ள ஒருவரும் விரும்புகிறதில்லை. இதனால், மதுசாரம் உஷ்ணத்தை வெளியே விட்டுவிடுகிறதென்பது தெரிகிறது.

மதுசார சம்பந்தமாக இரண்டு தைரிய சாலிகளின் செயலைப் பறற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம்.

மிஸ்டர் டி. பாக்ஷா (Mr. T Bagshaw), மிஸ்டர் எம். ஸி. லெஸ்டர் (Mr. M. C. Lester) என்பவர்கள் 1920-ம் ஆண்டு இங்கிலாண்டை விட்டு, 12 மாதங்களாகத் தென் துருவப் பிரதேசத்தில்

(Antarctic) தங்கியிருந்தனர். அவர்கள், தங்கள் படகைக் கீழ் மேலாகக் கவிழ்த்து அறையாக்கிக்கொண்டு அதிலே வசித்து வந்தனர். அங்கே கடுங்குளிராயிருந்தது. அவர்கள் வெளிவிடுகின்ற சுவாசமெல்லாம் அச்சிறிய அறையின்மேற் பலகையினுட்புறத்தில் (ceiling) உறைந்துபோயின. மிஸ்டர் பர்க்ஷா என்பவர் "லெஸ்டரும் நானும் இடையறாத சுகத் தோடிருந்தோம். நாங்கள் அடைந்திருந்த சுகம் விசேஷமான உணவருந்தாமல் இலேசான உணவருந்தி வந்ததினால்தானென்று சந்தேகமின்றி யுணர்ந்தோம். நாங்க ளங்கே யிருந்த கால மெல்லாம் துளி மதுசாரமுந் தொட்டதே யில்லை. தேயிலை நீரே எங்களுக்கு முக்கிய பானமாக யிருந்தது" என்றார்.

வடதுருவப் பிரதேசத்தையுந் தென் துருவப் பிரதேசத்தையும் (Arctic and Antarctic) சோதித்துவரச் சென்ற ஷாகல்டன் (Shackleton) என்பவரும் மற்றையரும், மதுசாரம் தேகத்தைக் குளிரப்பண்ணுகிற தென்றும், குளிரை யெதிர்த்து நிற்பதற்கு நல்ல ஆகாரம், தேக உஷ்ணத்தைக் காக்கும் உடை, மிகுதியான தேகாப்பியாசம், நெடுஞ் சுவாசம் (deep breathing), மதுபான மில்லாமை இவற்றை யனுசரிப்பதே உத்தமமென்றும் அறிவுள்ள நியமமென்றும் அறிந்து கொண்டனராம். மேலே கூறிய இரண்டு தைரியசாலிகளும் இவர்கள் மாதிரியையே பின்பற்றினராம். "மதுசாரம் வடதுருவப்பிரதேசத்திலும் தென் துருவப் பிரதேசத்திலும் மரணத்திற்கு எதுவாகுமென அறிதல் வேண்டும்."

"மதுசாரம், எப்போதும் கடினமான தேக வுழைப்புள்ளவர்களுக்குத் தீர்க்கமாய்த் தீங்கிழைக்கிறதென்று நான் முற்றும் நம்புகிறேன்". The brave explorer, Capt. Scott.

"சினெயிடர்க் கம்" எனும் வெகுமதியைப் பெறுவதற்குரிய ஆகாயக் கப்பற் பந்தயம் சென்றவாரம் இத்தாலிய தேசத்தில் வெனீஸ் நகரிலே நடைபெற்றது. அதிலே லெப்டினென்ட் வெஸ்டர் எனும் இங்கிலீஷ் ஆகாய விமானி தமது விமானத்திலே மணிததியாலம் 28 மைல் வீதம் பறந்து பந்தயம் வென்றார். இவர் 27 வயதுடைய வாலிபர். பந்தயத்திற்குச் சென்ற இங்கிலீஷ் விமானிகளுள் அதிக இள வயதுள்ளவர். இந்தப் பேர் போன ஆகாயப் பந்தயத்திலேயே இங்கிலீஷ் விமானி ஒருவர் வெற்றி பெற்றதை முன்னிட்டுப் பிரித்தானி யெங்கும் பெரு மகிழ்ச்சி உண்டாயிருக்கின்றது.

பத்திராசிரியர் குறிப்புகள்

சமூக சமய விஷயங்களை வேதாகம இதிகாசங்களில் நம்பிக்கை யுடையோர் வேதாகம இதிகாசங்களைத் தழுவி முடிவு செய்வர். அவற்றில் நம்பிக்கை யில்லாதவர்கள் பகுத்தறிவுகளைக் கொண்டு முடிவு காண்பர். இஃதிரண்டும் ஏற்ற முறையே. சமய விஷயங்களைத் நிதானம் செய்ய இவ்விரண்டைத் தவிர வேறு வழியுமில்லை. ஆனால் பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் சம்பிரதாயப் படி ஆளுக்கும் இடத்துக்கும் தக்கவாறு ஒவ்வொரு விதமாய் அபிப்பிராயங் கூறுவது இறுதியில் அநர்த்தத்தை விளைவிக்கும். சாமானியர் இவ்வாறு கூறின் ஒருவரும் மதியார். தேசமகாஜனங்களுக்கு வழிகாட்டியாயிருப்போர்—அல்லது தேசமகா ஜனங்களால் தமக்கு வழிகாட்டி யென நம்பப்படுவோர் முரண்பட்ட அபிப்பிராயம் வெளியிடத் தொடங்கினால் தேசமகா ஜனங்கள் மனக்கொதிப்பும் அதிர்ப்தியும் அடைவது அதிசயமன்று. மகாத்மா காந்தி தென்னாட்டில் கால் வைத்தது முதல், தமிழர்களின் துர்ப்பாக்கிய வசத்தினால், வர்ணாசிரமதருமத்தைப் பற்றி பல பல விதமாய் அபிப்பிராயங் கூறி தமிழர்கள் மனதை புண்படுத்த நேர்ந்ததற்கு மிக வருந்துகிறோம். பிறப்பினால் உயர்வு தாழ்வில்லை யென்றும் ஒவ்வொரு வகுப்பாரும் அவ்வவர் கடமையைச் செவ்வையாக ஆற்றில் ஆனந்த நிலையில் உயர்ந்தவர்களே என்றும் கூறிய மகாத்மா படிப்படியாய் இரங்கி, தமிழ் நாடு பிரயாணம் முடிந்து திருப்பூரை விட்டு நீங்குங்கால் "ஒரு பிராமணன் தன்கடமையைச் செய்யவில்லை யானாலும் பிராமண வகுப்பில் பிறந்த ஏக காரணத்தால் பிராமணனே ஆகின்றான் என்றும்,பிராமணரல்லாதார் பிராமணர் கடமையைப் பூர்த்தியாகச்செய்து வந்தாலும் அவர்களுக்குப் பிராமணத்துவம் இந்த ஜன்மத்தில் உண்டாகாதென்றும் இந்த ஜன்மத்தில் பிராமண கருமங்களைச் செய்ததின் பயனாக அடுத்த ஜன்மத்தில் பிராமண ராகப் பிறப்பார்கள் என்றும் கூறி, பிறப்பினாலேயே உயர்வு தாழ்வுண்டென்று கற்பித்து விட்டது பெரும் வியப்பாகவே இருக்கின்றது. வேறோ

ரிடத்து மகாத்மா பேசுகையில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் அவரவர் ஜாதித் தொழிலைச் சரிவரச் செய்யா விட்டால் அந்தந்த ஜாதிப் பெயருக்கு உரியவர்கள் ஆகமாட்டார்கள் என்றும் க்ஷத்திரிய வைசியத் தொழில் செய்யும் பிராமணன் க்ஷத்திரிய வைசியனேயாவா னென்றும் பிராமணத் தொழில் புரியும் க்ஷத்திரியனும் வைசியனும் பிராமணனுவானென்றும் கூறியுள்ளார். ஜாதியினால் உயர்வு தாழ்வுண்டென்று ஒப்புக்கொள்ளும் மகாத்மா தீண்டாமை யொழிய வேண்டு மென்று பிரசாரம் செய்வது எவ்வாறு பொருந்து மென்றுமே விளங்கவில்லை. வர்ணாசிரம விஷயத்தில் மட்டும் ஸ்மிருதி இதிகாசங்களையும் தீண்டாமை யொழித்தலில் பகுத்தறிவையும் ஆதாரமாகக் கொண்ட மகாத்மா வைதீகர்களாலும் தமிழ் மக்களாலும் குறை கூறப் படுவது அதிசயமன்று. தமிழ் நாட்டில் சுயமரியாதை உதயமாகி வளர்ச்சியடைந்து வரும் இத்தருணத்தில் பிராமண ரல்லாதாரான மகாத்மாவே இவ்வித முரண்பட்ட அபிப்பிராயங்கள் வெளியிட்டு குழப்பத்தை உண்டு பண்ணியது தமிழர்களின் துர்ப்பாக்கிய மென்று தான் திருப்தி யடைய வேண்டும்.

* * * * *

மகாத்மா மூலம் தமிழர்களுக்குண்டான மனக்கொதிப்பு வேறொருவழியில் சமானமாக ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது நமக்குச் சிறிது ஆறுதலை யளிக்கின்றது. சர். டி. சதாசிவய்யர் தமிழ் நாட்டில் ஒரு உன்னத ஸ்தானம் வகிக்கும் பிராமணத்தலைவர், சமய ஆராய்ச்சியில் நிபுணர்; வேதப் பயிற்சி யுடையவர். உயர்தர உத்தியோகங்கள் பல வகித்து உலக அனுபவம் வாய்ந்தவர். ஆகவே திருவண்ணாமலை ஆலயப்பிரவேச வழக்கில் அவர் கூறியிருக்கும் சாட்சியம் எவ்வளவு முக்கியமான தென்று நாம் சொல்லத் தேவையில்லை. "பிறப்பினால் உயர் தாழ்வுண்டென்று இந்த சாஸ்திரம் மதிப்பதில்லை யென்றும், ஜாதி உயர்வு தாழ்வு ஒழியவேண்டு மென்றும் ஆதித் திராவிடர் முதலியோர்கள் வீட்டில் உணவருந்தலாமென்றும் ஆதித் திராவிடர்கள் கோயிலுக்குள் போகலா மென்றும்" மிகத் தெளிவாக சர். சதாசிவய்யர் கூறி யிருக்கிறார். இத்தகைய அபிப்பிராயமுடைய பிராமணோத்தமர்கள் ஆயிரக்கணக்காகத் தோன்றி

னால் தென்னாட்டில் ஜாதிச் சண்டைகள் ஒழிந்து சகோதர பாவனை நிலை பெறுவது திண்ணம். அந்நாள் எந்நாள் வருமோ ?

*　　*　　*　　*　　*

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் முயற்சியால் தோன்றிய ஒற்றுமை மகா நாடு கல்கத்தா கூட்டத்தில் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கான அடிப்படி போடப்பட்டதை அறிந்து மிக மகிழ்ச்சியடை கின்றோம். பலவந்தம் செய்யாமலும் ஏமாற்றாமலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களை மதமாற்றம் செய்ய இருசமுதாயத்தாருக்கும் உரிமையளிப்பதாக ஒற்றுமை மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடைய நமக்கு மதமாற்றத்தில் எள்ளளவும் நம்பிக்கை கிடையாது. ஆனால் துரதிர்ஷ்ட முடைய இந்தியாவில் மதமாற்றத் தொல்லை வேரூன்றி விட்டதினால் அதன் வன்மையைக் குறைக்கவாவது இந்தத் தீர்மானம் உதவி புரியுமானால் நற்பயன் விளையக் கூடுமென்று நம்புகிறோம்.

*　　*　　*　　*　　*

தீ என்பதனால் நாக்கு வெந்து போகாது. ஆகவே பிரமாபுரம் ஆதித் திராவிடர் மகாநாட்டில் மனுதரும சாஸ்திரத்தை சர்க்கார் பறி முதல் செய்து தீக்கிரையாக்க வேண்டு மென்று ஒரு தீர்மானம் நிறை வேற்றி யிருப்பதைப் பற்றி வைதீகர்கள் ஒருக்கால் கலக்கமடையா திருக்கலாம். சக்தியற்ற சமுதாயங்களுக்குத் தமது மனக் குறையை நிறைவேற்ற கண்டனத் தீர்மானங்கள் நிறை வேற்றும் ஒரு வழிதானுள்ளது; ஆகவே அத்தீர்மானங்களின் போக்கை யறிந்து தேச க்ஷேமத்தை விரும்பும் ஜனத்தலைவர்கள் நிவர்த்தி மார்க்கம் தேடா விட்டால் குற்ற மற்ற தீர்மானங்கள் மூலம் வெளிவரப்பட்ட மனக் குறை கொலையிலும் கலவரங்களிலும் முடிந்தாலும் முடிந்து விடும். ஒரு பெரிய ஜனசமூகத்தை எந்நாளும் அடிமைப் படுத்தி வைத்துக் கொண்டிருக்க முடியாது. உலகத்திலே சமதர்மம் உதயமாகி தாண்டவமாடும் காலம் இது. நமது நாட்டிலோ அடிமைகளாகக் கருதப்படும் நமது சகோதரர்களுக்கு விடுதலை யளிக்க மனமில்லாத நாம் அந்நிய நாட்டார் பந்தத்திலிருந்து விடுதலை பெற விரும்புவது பகற் கனவேயாகும். நம்மவர்கள் இவ்விஷயங்களை நன்குணர்வார்களாக !

உலகப் போக்கு

இந்தியாவில், சேனு வீரரின் பிள்ளைகள் கற்கும் கலாசாலை ஒன்றில் உபாத்தியாராயிருந்த மிஸ் நாவிஸ் பாகலி என்னும் கன்னிகைக்கு நேரிட்ட அதிஷ்டவீனங்கள் போல, வேறு யாருக்கும் இது வரையும் நிகழ்ந்த தில்லை. இம் மாதின் விவாகம் நடத்த இன்னும் ஐந்து நாளிருக்கையில் 1914-ம் வருடத்தில் யுத்தந் தொடங்கியதால், நியமித்த கணவனும் யுத்தத்திற்குப் போகவேண்டி வந்தது. மோன்ஸ் என்னுமிடத்தில் நடந்த யுத்தத்தில் அவன் சாக நேரிட்டது. அதன் பின் முந்தியவனின் தம்பி அவளை விவாகம் முடிக்க இணங்கி யிருக்கையில், அவனும் பிரான்சில் யுத்தத்திலேயே மாள நேரிட்டது. பின், சேனுபதிகளில் ஒருவன் அவளை மணம் முடிக்க வாக்குக் கொடுத்திருந்தும் அவனும் 1917-ல் மாண்டுபோனுன். நான்காம் முறையாகவும், ஒருவன் சம்மதித்து மறு மாதம் மணஞ் செய்வோ மென்றிருக்கையில், அவனும் யுத்தத்தில் மாள நேரிட்டது. சிறு வயது தொடங்கி இம்மாதை அறிந்த ஒருவன் இந்தியா அரசியல் வேலையாயிருந்தவன் அவள் மீதிரங்கி, அவளை மணம் முடிக்க வாக்குச் சொல்லி யிருக்கையில் மோட்டார் கார் அபாயத்தில் அகப்பட்டு மாண்டனன். இரண்டு வருடஞ் சென்ற பின், இந்தியாவில் சிவில் சேர்விஸ் பாஸ் பண்ணி உத்தியோகமா யிருந்த ஒருவன் அவளைக் காதலித்து மணம் முடிக்க வாக்குச் சொல்லிக் கூடிக்குலாவித் திரிகையில், கள்ளர் கையி லகப்பட்டுக் கொல்லப் பட்டான். ஏழாம் முறையாகவும், ஒருவன் அவளைக் காதலித்திருக்கையில், அவனும் ஆகாய விமானத்திலிருந்து வீழ்ந்து உயிர் துறந்தனன். எட்டாம் முறையாகவும் ஓர் தகுந்த ஐரோப்பியன் அவளை மணம் முடிக்க ஏற்பட்டு, இருவருமாக ராவல்பிண்டி என்னு மிடத்திற்கு புகை ரத மார்க்கமாய்ப் போகையில், இரதத்திற்கு அபாயமுண்டானதால், அவன் உடனேயே சாக நேரிட்டது. அவளுக்குஞ் சில காயங்கள் உண்டாயின. அத்துடன் அதிர்ஷ்டமற்ற அம் மாது, மணவாழ்வுக் கிறுதி கட்டிக் கொண்டாளாம். விதிப்பயன் இல்லை யென்பார் இதனைச் சிந்திக்கக் கடவர்.

---

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

ஜீவாமிருதம்

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும்; எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுச்கு மிசவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப், பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும்; லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா **3—4—0.**

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம அடங்கிய கேட்லாக் இனாமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களேயும் ஒன்ருய்ச் சோத்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹ்ராஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மி யின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலேயை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலே ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலே ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னே.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனேயைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளேச் சண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 டைஜன் 1-க்கு ரூ. 2-4 டை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 டைஜன் 1-க்கு ரூ. 2 டை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

உபயோகித்து ஸ்திரீகளுக்கு சுகப்பிரசவசஞ்சீவியெனமதிக்கப்பட்ட

சுகப்பிரசவ மாத்திரைகள்.

அபாயமின்றி அதி சீக்கிரத்தில் வேதனையில்லாமல் சிசுவை ஆரோக்கியமாய் பிறக்கச் செய்கிறது.

(நியோ ஈசி டெலிவரிபில்ஸ் Neo Easy Delivery Pills.)

புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

நியோ பால்டு க்யூரா. Neo Bald Cura.

(நியோவழுக்கை நிவாரணி)

தலை வழுக்கை, முக வழுக்கை, சொட்டை, சுண்டு, முதலிய வற்றை எவ்வளவு நாள் பட்டதாயினும் நிவர்த்திக்கும், மயிரை அடர்ந்து தடித்து வளரச் செய்யும், மயிர் விழுவதை நிறுத்தும். அநேகரால் உபயோகித்து குணமடையச் செய்த சிறந்த சிரோ ரோக நிவாரணி. புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

நியோ பிலட் டானிக் Neo Blood Tonic.

(நியோ இரத்த சுத்த விருத்தி திரவம்.)

கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து திரேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புட்டி 1-க்கு விலை ரூ. 3-8-0.

நியோ காலரா ட்ராப்ஸ் Neo cholera Drops.

(காலரா நிவாரணி)

இரண்டொரு தடவை கொடுத்தவுடன் மலப்போக்கை நிறுத்தி சொஸ்தப் படக்கூடிய ஓர் கைகண்ட சிறந்த ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூ. 1—4—0.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

Neo Scientific Pharmacy—ல் கிடைக்கும் Easy Delivery Pills களை நான் என் குடும்பத்தில் இரண்டு பிரசவங்களுக்கு கொடுத்ததினால் ஷை மாத்திரைகள் மிகவும் சுகமாகவும் குழந்தைக் கும் தாயாருக்கும் யாதொரு அபாயமுமின்றி சீக்கிரத்தில் குழந் தையை வெளியாக்குகிறது. நான் இதுவரையில் இவ்வளவு சுக மான மாத்திரைகள் பார்த்ததில்லை. இந்த மாத்திரைகளுக்கு சுகப்பிரசவ சஞ்சீவினி என்றும் பெயர் கொடுக்கலாம்.

(Sd) S. ராஜம் அய்யர், மிட்டாதார், பாணம்பட்டு.

கிடைக்குமிடம் :—

Neo Scientific Pharmacy, Villupuram S. I. Ry.

நியோ சயின்டிபிக் பர்மசி, விழுப்புரம்.

ஏஜண்டு:—மேசர்ஸ். தார்தா அண்டு கோ.,

சைனபஜார் ரோட், மதராஸ்

30 வருடகாலமாய் உலகப்பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்.

வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவருக்கும் அதிகஉபயோகமானது.

அமிருதாமலகதைலம்

நேத்ரரோகிகளுக்கும் சிரரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

சிரஸ்ஸையும் கண்களையும் எப்போதும் காப்பாற்றும்

எல்லாவித சிரோ ரோகங்களையும் போக்கும்

பாரிசநோய்களை தூரமாக்கும் கன்னங்கள் நோயை நிர்மூலமாக்கும் பீனஸ ரோகத்தை வரவொட்டாது மூளைக்கு வலிவையுண்டாக்கும். காது நோய்களை போக்கடிக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியை யுண்டாக்கும்.

அபஸ்மாரத்தை தூரப்படுத்தும் தலை நரம்புகளுக்கு பலத்தை கொடுக்கும்.

நேத்ரரோகங்களுக்கு ஹிதமானது மூர்ச்சைகளைப் போக்கும்.

தலைபுண்களை போக்கடிக்கும் மயிரை நரைக்கவொட்டாமல் செய்யும்.

மயிரை பட்டுபோல் வளரச் செய்யும் நரைத்த மயிரை கருக்கச் செய்யும்.

யோசனை செய்வோருக்கு ரொம்பவும் மேன்மையானது.

தலை யிடிபை நிர்மூலமாக்கும்.

வித்யார்த்திகளுக்கு சர்வதாஹிதம் சர்மரோகிகளுக்கு நல்லதைச் செய்யும். தலை எரிச்சலை போக்கும் அதிக நித்திரையைகுறைக்கும் தூக்கமின்மையை போக்கும். இதின் குணங்கள் அனுபவமடைந்தவருக்கு தெரியும்.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.

இந்த உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151 கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287 Madras.**

80-(வரு) காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

ஷண்முகம்

பட்டணம்பொடி

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மேடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

HALF-TONE BLOCKS.

Copper 8 as. Square inch.
Zinc 6 as. Square inch.

LINE BLOCKES.

Copper 10 as. Square inch.
Zinc 4 as. Square inch.

Special Drawings if any will be charged. Charges for extra. Enlargement of photos and oil paintings On enquiry.





பாட்ரி டைனமோ மாக்னட்டோ எலக்ட்ரிக் ஹார்ன் கட் டௌட் ஸ்டார்ட்டிங் மோட்டர் முதலியன ரிப்பேர் செய்து உத்திரவாதம் எழுதிக் கொடுக்கப்படும்.

எதேனு மொன்று உத்திரவாதம் பெற்ற காலத்துக்கு முன் சரியாக வேலை செய்யாவிட்டால் மறுபடியும் இனமாக திருத்திக் கொடுக்கப்படும். உங்கள் பாட்டரிகள் ரிப்பேர் செய்யப்படும் காலம் வரை நாங்கள் பதில் பாட்ரி வாடகை யில்லாமல் கொடுக்கி றோம்.

சார்ஜ் மிக்க குறைவு.

ஸ்டாண்டார்ட் மோட்டர் எலெக்ற்றிக் ஒர்க்ஸ்
மோட்டர் எலக்ற்றிக் எஞ்சினீயர்கள்,
33, மவுண்ட் ரோட், சென்னை.

"His Master's Voice"

உங்களுக்குத் தேவையான

:: கிராமபோன்கள் ::
:: ரிக்கார்டுகள் ::
:: ஹார்மோனியங்கள் ::
:: பிடில் முதலிய வாத்திய ::
:: கருவிகளுக்கும் ::
:: ஸைகிள்கள் ::
:: மோட்டார் டயர்கள் ::
:: மோட்டார் ட்யூப்கள் ::
:: மற்றுமுள்ள, ஸைகிள் ::
:: மோட்டார் சாமான்களும் ::
:: கொடக் பில்ம், கேமரா ::
:: போட்டோ கருவிகளுக்கும் ::

பிற இடங்களுக்கு எழுதுமுன்

எங்களுக்கு எழுதுங்கள்

கேட்லாக் இனாம்.

HOMER & CO.,

175, Broadway, : : MADRAS.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.)

இது இராஜாக்கள், ஜமீன்தார்கள், கோடீஸ்வரர்கள் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.

REGISTERED TRADE MARK

REGISTERED TRADE MARK

K. தாவுத ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும், சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அநேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம்: உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்நாதாரமானது. ஜெகத்தோர் மெச்சும்,

அரைக் கீரை விதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு, அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், கஸ்தூரி, அம்பர். ஜவ்வாது, பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸர் பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து, பருவு நிவாரணி, வாஸனைப் பாக்கு, சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப்பவுடர், தங்கம் வெள்ளி ரேக்கமைந்த ஏலங் கிராம்பு வகையறா, சுருள் நைஸ் கொட்டைப்பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைககும், பல இடங்களில் தகுந்த ஏஜெண்டுகள் தேவை. ஒரு முறை வாங்கி பரீக்ஷித்துப்பாருங்கள்.

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்,

தந்தி விலாசம்:—"ஸெண்ட்மால்."

ஆதிபரிமளச் சாலை, 311. பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

அமெரிக்கன் சில்க் – – – – – அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே ! என்று வருந்தவேண்டாம்

ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள் !

முந்துங்கள் ! இதுவே தருணம் !!

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1 டுயில் ஷர்ட 1-க்கு விலை ரூ. 2—0—0.
,, 2 காக்கி ஷர்ட் விலை ரூ. 2—4—0.
,, 3 இங்கிலீஷ் டுயில் ஷர்ட் ரூ. 2—4—0.
,, 4 அமெரிக்கன் டோரியா ரூ. 2—4—0.
,, 5 உசத்தி பாப்ளின் ஷர்ட் ரூ. 3—8—0.

...வ்ஸ். முத்தையா கம்பெனி,

சென்னை.

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளு, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப் பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44" புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room: 287, Esplanade. ***Phone: No. 2693***

Printed at Muthiah Press, Madras and Publis